தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 21

## நிதி நிலை செயலாக்கம்
## 2014–2015

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான செயல்பாடு

# I. நெடுஞ்சாலைத் துறை

## 1. முன்னுரை

மாநிலத்தின் சாலை போக்குவரத்து கட்டமைப்பு வலுவான தொழில் வளர்ச்சிக்கும் ஒட்டு மொத்த பொருளாதார முன்னேற்றத்திற்கும் கணிசமான பங்களிப்பினை வழங்குகிறது. சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துவது பொருளாதார முன்னேற்றத்தின் முதுகெலும்பாக விளங்கி, நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு காரணமாக உள்ளது. ஒரு பகுதியின் முன்னேற்றத்திற்கு சாலை உட்கட்டமைப்பு முக்கிய காரணியாக விளங்குகிறது. தரமான சாலைகள்/ பாதுகாப்பான மற்றும் விரைவான போக்குவரத்தை உறுதிசெய்கிறது. அகலமான மற்றும் பாதுகாப்பான சாலைகள், வட்டசாலைகள், இணைப்பு பாலங்கள், சாலை மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சந்திப்புகளை மேம்படுத்துதல் ஆகியவை சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு தேவையான அடிப்படைகளாக விளங்குகின்றன. நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டும் பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

2014–2015 ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1.1. நெடுஞ்சாலைத்துறை மூலம் பராமரிக்கப்படும் சொத்துக்கள்

நெடுஞ்சாலைத்துறை 62294 கி.மீ. அரசு சாலைகளைப் பராமரித்து வருகிறது. சாலைகளின் வகைப்பாடு மற்றும் நீளம் மற்றும் பாலங்களின் விவரங்கள் முறையே **அட்டவணை 1** மற்றும் **அட்டவணை 2** இல் விவரிக்கப்பட்டுள்ளது. அரசு சாலைகளின் மேற்தளப்பரப்பு வாரியாக உள்ள நீளம் மற்றும் வழித்தடம் வாரியாக உள்ள நீளம் **அட்டவணை 3** மற்றும் **அட்டவணை 4** இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: சாலைகளின் வகைப்பாடு**

| வ. எண் | வகைப்பாடுகள் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் (தே.நெ) | |
| | தேசிய நெடுஞ்சாலை அலகு | 1998 |
| | இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் | 3006 |
| | **மொத்தம் (தே.நெ)** | **5004** |
| 2 | மாநில நெடுஞ்சாலைகள் (மா.நெ) | 11752 |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் (மா.மு.சா) | 11304 |
| 4 | மாவட்ட இதர சாலைகள் (மா.இ.சா) | 34234 |
| | **மொத்த சாலைகள்** | **62294** |

**அட்டவணை 2 : பாலங்களின் வகைகள் மற்றும் அவற்றின் எண்ணிக்கை**

| பாலங்களின் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| பெரிய பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் | 9293* |
| மிகச் சிறு பாலங்கள் | 108915 |
| இரயில்வே மேம்பாலங்கள் | 225 |
| இரயில்வே கீழ் பாலங்கள் | 60 |
| **மொத்தம்** | **118493** |

* பாலங்களில் 6 மீட்டருக்கு மேல் நீர் வழிப்பாதை உள்ள பாலங்கள் அடங்கியுள்ளது.

**அட்டவணை 3: மேற்தளப் பரப்பு வாரியாக நீளம்**

(நீளம் கிலோ மீட்டரில்)

| வ. எண். | வகைப்பாடு | சிமெண்ட் கற்கலவைத் தளம் | தார்த் தளம் | கப்பித் தளம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் | 2 | 5002 | – | **5004** |
| 2 | மாநில நெடுஞ்சாலைகள் | 15 | 11737 | – | 11752 |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் | 21 | 11283 | – | 11304 |
| 4 | மாவட்ட இதர சாலைகள் | 72 | 34162 | – | 34234 |
| **மொத்தம்** | | **110** | **62184** | – | **62294** |

**அட்டவணை 4: அரசு சாலைகளின் வழித்தடம் வாரியாக நீளம்**

**(நீளம் கிலோ மீட்டரில்)**

| வ. எண் | வகைப்பாடு | ஒரு வழித் தடம் | இடை வழித் தடம் | இரு வழித் தடம் | பல வழித் தடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **1** | **தேசிய நெடுஞ்சாலைகள்** | | | | | |
| | அ) தேசிய நெடுஞ்சாலை அலகின் கட்டுப்பாட்டில் | 11 | 4 | 1851 | 132 | 1998 |
| | ஆ) தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் | – | – | 903 | 2103 | 3006 |
| | **மொத்தம்** | **11** | **4** | **2754** | **2235** | **5004** |
| | **வழித்தடத்தின் விழுக்காடு** | 0% | 0% | 55% | 45% | |
| **2** | **மாநில நெடுஞ்சாலைகள்** | **51** | **409** | **9853** | **1439** | **11752** |
| | **வழித்தடத்தின் விழுக்காடு** | 0% | 4% | 84% | 12% | |
| **3** | **மாவட்ட முக்கிய சாலைகள்** | **581** | **7433** | **3115** | **175** | **11304** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 5% | 66% | 28% | 1% | |
| **4** | **மாவட்ட இதர சாலைகள்** | **30045** | **3265** | **870** | **54** | **34234** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 88% | 10% | 2% | 0% | |
| | **மொத்தம்** | **30688** | **11111** | **16592** | **3903** | **62294** |
| | **சாலைகளின் மொத்த நீளத்தில் வழித்தடத்தின் விழுக்காடு** | 49% | 18% | 27% | 6% | |

## 1.2. திட்டங்களின் செயல்பாடு

### 1.2.1. 2014–2015 ஆம் ஆண்டின் நிதி செயல்பாடு

2014–2015 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணிகளின் நிதி நிலை செயலாக்கம், மற்றும் 2015–2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு **அட்டவணை 5 இல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5: நிதி ஒதுக்கீடும் செலவும்**

**(ரூ.இலட்சத்தில்)**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2014–2015 | | 2015–2016 |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு – செலவு திட்ட மதிப்பீடு |
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு (க (ம) ப)** | | | |
| | **மாநில நெடுஞ்சாலைகள்** | | | |
| 1 | பாலங்கள் (பகுதி 2 திட்டம்) | 0.07 | 0.00 | 0.07 |
| 2 | சாலைகள் (பகுதி 2 திட்டம்) | 0.07 | 8618.93 | 0.06 |
| 3 | 16 பெரும் பணிகள் | 200.38 | 155.62 | 0.01 |
| 4 | 17 சிறு பணிகள் | 40.00 | 20.00 | – |
| | **மொத்தம்** | **240.52** | **8794.55** | **0.14** |
| | **மாவட்ட முக்கிய சாலைகள்** | | | |
| 5 | மாவட்ட முக்கிய சாலைகள் (பகுதி 2 திட்டம்) | 0.08 | 0.00 | 0.08 |
| 6 | 16 பெரும் பணிகள் | 200.00 | 175.69 | 0.01 |
| 7 | 17 சிறு பணிகள் | 50.00 | 49.00 | – |
| | **மொத்தம்** | **250.08** | **224.69** | **0.09** |
| | **மாவட்ட இதர சாலைகள்** | | | |
| 8 | மாவட்ட இதர சாலைகள் (பகுதி 2 திட்டம்) | 0.07 | 0.00 | 0.05 |
| 9 | 16 பெரும் பணிகள் | 200.00 | 199.77 | 0.01 |
| 10 | 17 சிறு பணிகள் | 50.00 | 50.00 | – |
| | **மொத்தம்** | **250.07** | **249.77** | **0.06** |
| | **பழுதடைந்த பாலங்களை மறுசீரமைத்தல்** | | | |
| 11 | பழுதடைந்த பாலங்களை மறுசீரமைத்தல் (பகுதி 2 திட்டம்) | 0.03 | 0.00 | 0.03 |
| 12 | 16 பெரும் பணிகள் | 150.00 | 149.00 | 0.01 |
| | **மொத்தம்** | **150.03** | **149.00** | **0.04** |
| 13 | இதர சாலைகள் (பகுதி 2 திட்டம்) | 0.09 | 635.76 | 0.09 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2014–2015 | | 2015–2016 |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு – செலவு திட்ட மதிப்பீடு |
| | **ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்** | | | |
| 14 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாநில நெடுஞ்சாலைகள் | 119948.07 | 119891.54 | 119948.07 |
| 15 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாவட்ட முக்கிய சாலைகள் | 102234.22 | 102230.98 | 102234.22 |
| 16 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாவட்ட இதர சாலைகள் | 26317.71 | 26317.71 | 26317.71 |
| 17 | சி.ஆர்.ஐ.டி.பி. – சிறப்புக் கூறு திட்டம் | 31500.00 | 29653.10 | 31500.00 |
| | **மொத்தம்** | **280000.00** | **278093.33** | **280000.00** |
| 18 | சென்னை ஆரச் சாலைகள் மேம்பாடுத் திட்டம் | 0.01 | 160.42 | 0.02 |
| 19 | புறவழிச் சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்துதல் | | | |
| | (i) பணிகள் | 0.02 | 0.00 | 0.02 |
| | (ii) நிலம் | 20000.00 | 1317.18 | 20000.00 |
| | **மொத்தம்** | **20000.02** | **1317.18** | **20000.02** |
| 20 | தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக தொழிற்சாலை பகுதிகளின் சாலைகளை மேம்பாடு செய்தல் | 9165.01 | 12397.01 | 8409.01 |
| 21 | சென்னை வெளிவட்டச் சாலை –(கட்டம் I ) | 32600.00 | 12799.06 | 28500.00 |
| 22 | சென்னை வெளிவட்டச் சாலை –(கட்டம் II) | 9000.00 | 8009.05 | 10600.00 |
| 23 | கட்டடங்கள் கட்டுதல் | 1409.44 | 3314.01 | 656.16 |
| 24 | சென்னை மாநகரில் உள்ள தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையை தரம் உயர்த்தும் பணி | 0.02 | 0.02 | 0.02 |
| 25 | பழங்குடியினர் பகுதிகளில் சாலைகளை அமைக்கும் திட்டம் | 0.01 | 0.00 | 0.01 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2014–2015 | | 2015–2016 |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு – செலவு திட்ட மதிப்பீடு |
| 26 | மாநில உள் கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத்துறை அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டம் | 375.02 | 500.76 | 0.03 |
| 27 | சாலை பாதுகாப்பிற்கான சிறப்புத்திட்டம் | 10000.00 | 2048.67 | 10000.00 |
| 28 | கிழக்கு கடற்கரை சாலையில் பாலாற்றில் பாலம் கட்டுதல் | 4000.00 | 4000.00 | 4400.00 |
| 29 | வடக்கு துறைமுக இணைப்புச் சாலை | 0.01 | 0.00 | 0.01 |
| 30 | வீட்டு வசதி (குடியிருப்புகள்) | 500.00 | 500.00 | 14.00 |
| 31 | மாநகர சாலைப் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள் | | | 21300.00 |
| 32 | உயர் செறிவு உடைய சாலைகள் | | | 3700.00 |
| 33 | சேலம் சந்திப்பு–ஏற்காடு சாலையில் மேம்பாலம் கட்டுதல் | | | 0.01 |
| | **திட்டம்–மொத்தம் (க (ம) ப)** | **367940.33** | **333193.28** | **387579.71** |
| 34 | சுனாமி மறுவாழ்வுத்திட்டம் | 0.01 | 3318.11 | 0.01 |
| | **திட்டம் – மொத்தம் (க (ம) ப)** | **367940.34** | **336511.39** | **387579.72** |
| | **நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு (நபார்டு மற்றும் கி சா)** | | | |
| 35 | நபார்டு வங்கி நிதியுதவிடன் செயல்படுத்தப்படும் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு | 10000.00 | 95.07 | 10000.01 |
| 36 | நபார்டு நிதி உதவியுடன் அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல் | 245.94 | 42.31 | 140.22 |
| 37 | நபார்டு நிதி உதவியுடன் அரசு சாலை மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் பாலங்கள் கட்டுதல் | 26500.00 | 23359.42 | 20000.00 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2014–2015 | | 2015–2016 |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு – செலவு திட்ட மதிப்பீடு |
| 38 | நபார்டு நிதி உதவியுடன் கிராமச்சாலைகள் திட்டம் | 152.79 | 25.48 | 0.02 |
| 39 | நபார்டு நிதி உதவியுடன் பேருந்து வழித்தட சாலைகளை மேம்படுத்துதல் | 0.01 | 0 | 0.02 |
| 40 | சிறப்பு உறுப்புத் திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி கடன் உதவியுடன் ஊராட்சி சாலைகள் மேம்பாடு | 0.01 | 0 | 0.02 |
| 41 | ஆசிய வளர்ச்சி வங்கி கடன் உதவியுடன் கூடிய சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் பாலங்கள் கட்டுதல் | 1.58 | 1.58 | 1.58 |
| 42 | புறவழிச்சாலை பணிகள் (நில எடுப்பு) | 2494.12 | 206.68 | 2500.00 |
| | **திட்டம் – மொத்தம் (நபார்டு மற்றும் கி சா)** | **39394.45** | **23730.54** | **32641.85** |
| 43 | சுனாமி மறுவாழ்வுத்திட்டம் | 0.00 | 305.76 | 0.00 |
| | **மொத்தம் (நபார்டு மற்றும் கி சா)** | **39394.45** | **24036.30** | **32641.85** |
| | **திட்டங்கள் அலகு** | | | |
| 44 | தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுதல் | 18363.00 | 7889.10 | 23636.25 |
| 45 | போக்குவரத்து மேலாண்மைக்காக சென்னை பெருநகரப் பகுதிகளில் சாலை மேம்பாலங்கள் கட்டுதல் | 6491.10 | 2876.52 | 9244.42 |
| 46 | பாலங்கள் கட்டுதல் | 2772.36 | 886.72 | 2772.36 |
| 47 | நபார்டு கடன் உதவியுடன் பாலங்கள் கட்டுதல் / திரும்பக் கட்டுதல் மற்றும் சாலைகள் மேம்படுத்துதல் | 777.29 | 921.90 | 777.29 |
| 48 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்ட சாலைப் பணிகள் | 0.02 | 362.56 | 0.02 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2014–2015 | | 2015–2016 |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு – செலவு திட்ட மதிப்பீடு |
| 49 | இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுதல் | 50000.03 | 23868.76 | 47974.51 |
| 50 | மதுரை ஆரச் சாலைகள் கட்டம் –I | 0.01 | 0 | 0.01 |
| 51 | ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மதுரை ஆரச் சாலைகள் – கட்டம் – II | 0.01 | 0 | 0.01 |
| 52 | தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் ஊரக சாலைகள் அங்காடி மையங்களுக்கு செல்லும் சாலைகள் | 0.01 | 0 | 0.01 |
| 53 | புயல் வெள்ள நிவாரண சாலைப்பணிகள் | 0.01 | 0 | 0.01 |
| 54 | பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் பாண்டி – கிருஷ்ணகிரி சாலை சந்திப்பு கட்டுதல் | 0.01 | 0 | 0.01 |
| 55 | மாநகரப் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) | 0.01 | 0 | 0.01 |
| 56 | தண்டையார்பேட்டை இரயில்வே நிலையங்களுக்கு அருகே V.M தெருவில் உள்ள சாலை மேம்பாலம் அணுகுசாலை நடுவர் மன்ற தீர்ப்பு ( தொகை சில்லரை செலவினங்களுக்கான தொகை 2014-15-ல் இருந்து பெறப்படும்) | 197.01 | 197.43 | 0.01 |
| | **(திட்டங்கள்) – மொத்தம்** | **78600.87** | **37002.99** | **84404.92** |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2014–2015 | | 2015–2016 |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு – செலவு திட்ட மதிப்பீடு |
| | **பெருநகர அலகு** | | | |
| 57 | சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் | 25000 | 12022.98 | 25000 |
| | **மொத்தம் (பெருநகரம்)** | **25000** | **12022.98** | **25000** |
| | **தேசிய நெடுஞ்சாலை (தே நெ)** | | | |
| 58 | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் | 18900.00 | 15831.16 | 12136.25 |
| 59 | மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம் | 1000.00 | 3759.83 | 1000.00 |
| 60 | பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை இணைக்கும் திட்டம் | 0.01 | 17.00 | 1000 |
| 61 | பாரத் நிர்மான் திட்டம் (மாநில அரசால் அனுமதிக்கப்படும் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு) | 602.85 | 1994.66 | 561.24 |
| 62 | மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் (சாலைகள் அலகு) | 0.01 | 0.00 | 0.01 |
| 63 | மாநில திட்டங்கள்– இதர மூலப் பணிகள் | 0.01 | 14.88 | 0.01 |
| | **மொத்தம் (தேநே)** | **20502.88** | **21617.52** | **14697.51** |
| | **தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் (துநாசாமேதி)** | | | |
| 64 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் | 49335.04 | 6619.49 | 124497.08 |
| | **மொத்தம் (துநாசாமேதி)** | **49335.04** | **6619.49** | **124497.08** |
| | **நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் (நெஆநி)** | | | |
| 65 | ஆய்வு கூடங்களுக்கு கருவிகள் | 0.01 | 0.00 | 0.00 |
| 66 | நெடுஞ்சாலை ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை நிலையம் | 0.01 | 0.00 | 0.01 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 2014–2015 | | 2015–2016 |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு – செலவு திட்ட மதிப்பீடு |
| 67 | மாவட்ட இதர சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் ஒடு தள மேற்பரப்பு நிலை குறித்த தகவல்கள் சேகரிப்பதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 5.40 | 5.40 | 5.40 |
| 68 | தமிழ்நாடு மாநில புதுமையான முயற்சிகள் (TANII) | –– | –– | 283.70 |
| | **மொத்தம் (நெ.ஆநி)** | **5.42** | **5.40** | **289.11** |
| | **முதன்மை இயக்குநர்** | | | |
| 69 | மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளில் ஒடு தள மேற்பரப்பு நிலை குறித்த தகவல்கள் சேகரிப்பதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 3.02 | 2.12 | 3.02 |
| | **மொத்தம் (முதன்மை இயக்குநர்)** | **3.02** | **2.12** | **3.02** |
| | **திட்டம் – மொத்தம்** | **580781.94** | **434194.33** | **669113.15** |
| | **சுனாமி மறுவாழ்வுத் திட்டம் மொத்தம்** | **0.01** | **3623.87** | **0.01** |
| | **ஒட்டு மொத்தம்** | **580781.95** | **437818.20** | **669113.16** |

## 1.2.2. திட்டப் பணிகளின் செயல்பாடு

2014–2015 ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட திட்டப் பணிகளின் விவரம் மற்றும் 2015–2016ஆம் ஆண்டிற்கான இலக்குகள் **அட்டவணை 6** இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6: திட்டப் பணிகளின் செயல்பாடு**

| வ எண் | திட்டத்தின் பெயர் | 2014–2015 இன் செயலாக்கம் | | 2015–2016 இன் இலக்கு | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் கட்டுமானங்கள் எண்ணிக்கை | சாலை களின் நீளம் கி.மீ | பாலங்கள் / சிறு பாலங்கள் கட்டுமானங்கள் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் கி.மீ. |
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு** | | | | |
| 1 | பகுதி–2 திட்டம் | | | | |
| | கட்டடங்கள் | 21 | | 27 | |
| 2 | ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | | | | |
| | மாநில நெடுஞ்சாலைகள் | 128 | 709 | 150 | 1000 |
| | மாவட்ட முக்கிய சாலைகள் | 64 | 824 | 100 | 1100 |
| | மாவட்ட இதர சாலைகள் | 67 | 1137 | 80 | 1200 |
| | சிறப்புக் கூறு திட்டம் | | 760 | 10 | 600 |
| | **மொத்தம்** | **259** | **3430** | **340** | **3900** |
| | **திட்டம்–மொத்தம்** | | | | |
| | **பாலங்கள்/ சாலைகள்** | **259** | **3430** | **340** | **3900** |
| | **கட்டடங்கள்** | **21** | | **27** | |
| | **சுனாமி மறுவாழ்வுத் திட்டம்** | **5** | | **6** | |
| | **நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு** | | | | |
| 3 | நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு | | 8.70 | | |

| வ எ ண் | திட்டத்தின் பெயர் | 2014–2015 இன் செயலாக்கம் | | 2015–2016 இன் இலக்கு | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் கட்டுமானங்கள் எண்ணிக்கை | சாலை களின் நீளம் கி.மீ | பாலங்கள் / சிறு பாலங்கள் கட்டுமானங்கள் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் கி.மீ. |
| 4 | நபார்டு நிதி உதவியுடன் அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல் / மறுகட்டமைப்பு | | | | |
| 5 | நபார்டு நிதி உதவியுடன் அரசு சாலை மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் பாலங்கள் கட்டுதல் | 126 | | 50 | |
| 6 | நபார்டு நிதி உதவியுடன் கிராமச்சாலைகள் திட்டம் | | | | |
| | **மொத்தம்** | **126** | **8.70** | **50** | |
| 7 | சுனாமி மறுவாழ்வு திட்டம் | | | | |
| 8 | இரயில்வே பணித் திட்டம் | | | 9 | |
| | **மொத்தம்** | **126** | **8.70** | **59** | |
| | **திட்டங்கள் அலகு** | | | | |
| 9 | இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுதல் | | | 4 | |
| 10 | சாலை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுதல் | 13 | | 9 | |
| 11 | ஆற்றுப் பாலங்கள் கட்டுதல் HUDCO | | | | |
| 12 | நபார்டு நிதி உதவியுடன் காவிரி பாசன மாவட்டங்களில் பாலம் கட்டுதல் மற்றும் கரும்புச்சாலைகள் மேம்பாடு | 2 | | 1 | |

| வ எண் | திட்டத்தின் பெயர் | 2014–2015 இன் செயலாக்கம் | | 2015–2016 இன் இலக்கு | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் கட்டுமானங்கள் எண்ணிக்கை | சாலை களின் நீளம் கி.மீ | பாலங்கள் / சிறு பாலங்கள் கட்டுமானங்கள் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் கி.மீ. |
| 13 | சென்னைப் பெருநகரப் பகுதிகளில் போக்குவரத்து மேலாண்மைக்காக சாலை மேம்பாலங்கள் | | | 1 | |
| | **மொத்தம்** | **15** | | **15** | |
| 14 | **சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்** | | | | |
| | அ) இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலம்/ கீழ்பாலம் | 1 | | 1 | |
| | ஆ) பல்வழிச் சாலை மேம்பாலம் | | | 3 | |
| | இ) ஆற்றுப் பாலம் | | | 4 | |
| | ஈ) சாலைகள்/ பாலங்கள் (கி.மீ.) | | 9.45 | | 6.65 |
| | **மொத்தம்** | **1** | **9.45** | **8** | **6.65** |
| | **தேசிய நெடுஞ்சாலை அலகு** | | | | |
| 15 | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் | | 242.13 | | 432.46 |
| 16 | மாநிலங்களுக்கு இடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம் | | 44.89 | | 24.30 |
| 17 | பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை இணைக்கும் திட்டம் | | | | |
| | **மொத்தம்** | | **287.02** | | **456.76** |
| | **தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்** | | | | |
| 18 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் -II | | | | |
| 19 | மேம்பாடு | | 575.00 | | 1504 கி.மீ |

| வ எ ண் | திட்டத்தின் பெயர் | 2014–2015 இன் செயலாக்கம் | | 2015–2016 இன் இலக்கு | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் கட்டுமானங்கள் எண்ணிக்கை | சாலை களின் நீளம் கி.மீ | பாலங்கள் / சிறு பாலங்கள் கட்டுமானங்கள் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் கி.மீ. |
| 20 | பாலங்கள் /சிறு பாலங்கள் | | | | நீளச்சாலைப் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி |
| | **மொத்தம்** | | **575.00** | | **1504.00** |
| | **ஒட்டுமொத்தம்** | | | | |
| | **சாலை (ம) பாலங்கள்** | **401** | **3736.17** | **422** | **4363.41** |
| | **கட்டடங்கள்** | **21** | | **27** | |
| | **சுனாமி மறுவாழ்வுத் திட்டம்** | **5** | | **6** | |

## 1.3. திட்டம் சாரா பணிகளின் செயல்பாடு

சாலைகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பிற்காக 2014–15 ஆம் ஆண்டிற்கு ரூ.1157.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில், 13 வது நிதி குழுவின் பரிந்துரையின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.337.33 கோடி மற்றும் வேலை நிதியில் ஊதியம் பெறும் பணியாளர்களின் ஊதிய தொகையும் அடங்கும்.

இது தவிர 13–வது நிதி குழுவின் பரிந்துரையின் படி, கிராமப்புற ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலம் பராமரிக்க ரூ.168.67 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2014–15 ஆம் நிதியாண்டில், ரூ.1176.27 கோடி செலவில் 4030 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

### 1.3.1. நிதி செயல்பாடு

இத்திட்டத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் திட்டம் சாரா பணிகளுக்கு செலவிடப்பட்ட விவரம் மற்றும் 2015–2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் **அட்டவணை 7** இல் விவரிக்கப்பட்டுள்ளது.

### அட்டவணை 7: திட்டம் சாரா பணிகள்– நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்

( ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2014–2015 | | 2015–2016 |
|---|---|---|---|---|
| | | வரவு செலவு திட்ட மதிப்பீடு | செலவினம் | வரவு –செலவு திட்ட மதிப்பீடு |
| 1 | நகர்ப்புற தேசிய நெடுஞ்சாலைகள் | 234.52 | 234.52 | 234.52 |
| 2 | சென்னை மாநகராட்சியிலிருந்து எடுக்கப்பட்ட சென்னை மாநகரத்திலுள்ள முக்கிய சாலைகள் | 2110.64 | 2110.64 | 2110.64 |
| 3 | மாநில நெடுஞ்சாலைகள் | 15296.00 | 15646.37 | 15296.00 |
| 4 | மாவட்ட முக்கியச் சாலைகள் | 13567.68 | 13948.97 | 13567.68 |
| 5 | மாவட்ட இதர சாலைகள் | 48819.93 | 50008.72 | 48819.93 |
| 6 | கரும்புச் சாலைகள் | 1849.79 | 1849.79 | 1849.79 |
| 7 | நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைச் சாலைகளை மேம்படுத்துதல் | 94.51 | 94.51 | 94.51 |
| 8 | நெடுஞ்சாலைத்துறைக்கு 13வது நிதிக் குழு மானிய ஒதுக்கீட்டிலிருந்து ஊரகச் சாலைகளை பராமரித்தல் | 33733.33 | 33733.33 | 0 |
| 9 | ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இயக்குநர், ஊரக சாலை மேம்பாடு மூலம் பராமரித்தல் | 16866.66 | 16866.66 | 0 |
| | **மொத்தம்** | **132573.06** | **134493.51** | **81973.07** |

### 1.3.2. பணிகளின் செயல்பாடு

2014–2015 ஆம் ஆண்டில் திட்டம் சாராப் பராமரிப்பின் கீழ், புதுப்பிக்கப்பட்ட சாலைகளின் நீளம் மற்றும் 2015–2016ஆம் ஆண்டிற்கான இலக்கு ஆகியவை **அட்டவணை 8** இல் விவரிக்கப்பட்டுள்ளது.

### அட்டவணை 8: திட்டம் சாராப்பணிகள் – செயல்பாடுகள்

(நீளம் கி.மீ)

| வ. எண் | அலகின் பெயர் | சாதனைகள் 2014–2015 | இலக்குகள் 2015–2016 |
|---|---|---|---|
| 1 | கட்டுமானம் மற்றும் பராமரிப்பு | 3555 | 3500 |
| 2 | நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் | 475 | – |
| | **மொத்தம்** | **4030** | **3500** |

## 2. முக்கிய திட்டங்களின் கீழ் செயல்பாடு மற்றும் பிரதான பணிகளின் விவரம்

நெடுஞ்சாலைத்துறையின் அனைத்து அலகிற்கும் 2014–15 ஆம் ஆண்டிற்கு ரூ.5812.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் ரூ.4341.94 கோடி திட்டப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

### 2.1. ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

சாலையின் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளை இருவழித்தடமாகவும் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளை இடைவழித்தடமாகவும் அகலப்படுத்தும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், 2014–15 ஆம் நிதியாண்டில், சுமார் 843 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தவும், 3203 கி.மீ. நீளச் சாலைகளை மேம்படுத்தவும், 746 சிறுபாலங்கள் / பாலங்கள்/ பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளவும் ரூ.3000 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

2014–15 ஆம் ஆண்டில் 3430 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் மற்றும் 259 பாலங்கள்/ தாம்போகிகள்/ பாதுகாப்பு பணிகள் ரூ.2780.93 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.1. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாநில நெடுஞ்சாலைகள்

2014–15 ஆம் நிதியாண்டில் ரூ.1279.93 கோடி மதிப்பில் நிலுவைப் பணிகளாக 349 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 91 பாலங்கள் / சிறுபாலப் பணிகள் / பாதுகாப்பு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

மேலும் 2014–15ஆம் நிதியாண்டில் புதிய பணிகளாக ரூ.1186.55 கோடி மதிப்பில் 927 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும், 432 பாலங்கள் / சிறு பாலங்கள் / பாதுகாப்புப் பணிகளும், மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2014–15 ஆம் ஆண்டில் ரூ.1198.92 கோடி செலவில் 709 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும், 128 பாலங்கள் / சிறுபாலங்கள்/ பாதுகாப்பு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.2. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட முக்கிய சாலைகள்

2014–15 ஆம் நிதியாண்டில் ரூ. 943 கோடி மதிப்பில் நிலுவை பணிகளாக 686 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 49 பாலங்கள் / சிறு பாலங்கள்/ பாதுகாப்புப் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

2014–15 ஆம் நிதியாண்டில் புதிய பணிகளாக ரூ. 735.32 கோடி மதிப்பில் 772 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும், 187 பாலங்கள் / சிறு பாலங்கள் / பாதுகாப்பு பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2014–15 ஆம் நிதியாண்டில் ரூ.1022.31 கோடி செலவில் 824 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும், 64 பாலங்கள் / சிறுபாலங்கள் / பாதுகாப்பு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.3. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட இதர சாலைகள்

2014–15 ஆம் நிதியாண்டில் ரூ.319 கோடி மதிப்பில் நிலுவைப் பணிகளாக 590 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 45 பாலங்கள் / சிறுபாலங்கள் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

2014–15 ஆம் நிதியாண்டில் புதிய பணிகளாக ரூ. 884.39 கோடி மதிப்பில் 1848 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும், 116 பாலங்கள் / சிறு பாலங்கள் / பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2014–15 ஆம் நிதியாண்டில் ரூ. 263.18 கோடி செலவில் 1137 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும், 67 பாலங்கள் / சிறுபாலங்கள் / பாதுகாப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**2.1.4. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட இதர சாலைகள்– சிறப்பு உறுப்பு திட்டம்:**

2014–15 ஆம் நிதியாண்டில் ரூ.101 கோடி மதிப்பிலான நிலுவைப் பணிகளில் 261 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

2014–15 ஆம் நிதியாண்டில் புதிய பணிகளாக ரூ.193.74 கோடி மதிப்பில் 499 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும், 11 பாலங்கள் / சிறு பாலங்கள் மற்றும் பாதுகாப்பு பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2014–15 ஆம் நிதியாண்டில் ரூ.296.53 கோடி செலவில் 760 கி.மீ. நீளச்சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**2.1.5. ஈரோடு வெளிவட்டச் சாலை**

ஈரோடு நகருக்குள் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க கொக்கராயன் பேட்டை முதல் திண்டல் வரை 14.80 கி.மீ. நீளத்திற்கு வெளிவட்டச் சாலை அமைக்க நிலஎடுப்பு பணிக்கு ரூ.22 கோடிக்கு CRIDP திட்டத்தில் அரசு ஒப்புதல் அளித்தது. இதில் கி.மீ.0/0–14/8 வரை நிலஎடுப்பு பணி முழுமையாக முடிவுற்றது.

காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல் உள்ளிட்ட வெளிவட்டச் சுற்றுச்சாலை கி.மீ.0/0–2/2 வரை அமைக்கும் பணி முதற் கட்டமாகவும் மற்றும் கி.மீ 2/2 – 7/6 வரை சாலை அமைக்கும் பணி இரண்டாம் கட்டமாகவும் CRIDP திட்டத்தில் முடிக்கப்பட்டு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**2.1.6. ஈரோடு அரசு மருத்துவமனை சந்திப்பு மேம்பாட்டுப் பணி**

ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் உள்ள ஈரோடு – பெருந்துறை – காங்கேயம் சாலை சந்திப்பு மேம்பாட்டுப்பணி **ரூ.11.00 கோடி** மதிப்பில் CRIDP திட்டத்தின் கீழ் 2014 – 15இல் முடிக்கப்பட்டது.

## 2.2. பகுதி–II திட்டம்

2014–15 ஆம் ஆண்டில் நிலுவைப் பணிகளின் கீழ், 24 கட்டடப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும், 2014–15 இல் புதிய பணிகளாக, ரூ.3.63 கோடி மதிப்பில், 2 கோட்ட அலுவலகங்கள், 4 உட்கோட்ட அலுவலகங்கள் (ஒரு தரக்கட்டுப்பாடு உட்கோட்டம் உட்பட), ஒரு பிரிவு அலுவலகம், 4 பயணியர் மாளிகைகள் மற்றும் ஒரு வாகன நிறுத்தம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2014–15 ஆம் ஆண்டில் 21 கட்டடப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ரூ.33.14 கோடி செலவிடப்பட்டுள்ளது.

எனினும், 2015 – 2016 ஆண்டு முதல் பகுதி II திட்டத்திற்கு பதிலாக பல வகை புதிய திட்டங்களுக்கு "தமிழ்நாடு மாநில புதுமை முயற்சிகள்" திட்டத்திற்காக நிதி ஆதாரம் உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

## 2.3. சென்னை பெருநகரப்பகுதியில் பணிகள்

சென்னை பெருநகரம் எல்லாத்துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகிறது. முக்கியமாக போக்குவரத்து வளர்ச்சியினால் ஏற்படும் உள்கட்டமைப்பு தேவைகளை நிறைவேற்றுவதற்காக, 2003–2004 ஆம் ஆண்டில், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.2017.03 கோடி மதிப்பில் மொத்தம் 482.47 கி.மீ. சாலைப் பணிகள், 17 பாலப் பணிகள், 11 பல்வழிச் சாலை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப் பாதைக் கடவில் 10 இரயில்வே மேம்பாலம் / கீழ்பாலம் அமைத்தல், ஒரு உயர்மட்ட நடைபாதை (Skywalk), 5 சுரங்க நடைபாதை மற்றும் ஒரு பாதசாரிகளுக்கான நடைபாதை ஆகிய பணிகளை உள்ளடக்கிய 265 பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

2014–15 ஆம் ஆண்டு வரை மொத்தமாக சுமார் ரூ.1038.62 கோடி இப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில், கீழ்கண்ட தலைப்புகளில் செலவிடப்பட்ட விவரங்கள்.

**அட்டவணை 9: செலவின விவரம்**

| வ எண் | தலைப்பு | 2014–2015ல் நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | JW 1608 | 20000.00 | 11344.33 |
| 2. | KJ 1603 | 5000.00 | 678.65 |
| 3. | JD 1601 பாலங்கள் | 4496.10 | 2125.03 |
| 4. | JT 1604 இரயில்வே பாலங்கள் | 12606.01 | 1890.53 |
| 5. | JJ 1601 | 500.00 | 1.30 |
| **மொத்தம்** | | **42602.11** | **16039.84** |

எடுத்துக் கொள்ளப்பட்ட 482.47கி.மீ சாலையில் இதுவரை சுமார் 472 கி.மீ நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் சென்னை மறைமலை அடிகள் பாலம் இரும்புலியூர் சாலையில் கி.மீ. 17/4ல் இராஜ கீழ்பாக்கம் முதல் அகரம் தென் சாலை வரை தாம்பரம் கிழக்கு புறவழிச் சாலையில் நிலஎடுப்பு முடிவடைந்துள்ள பகுதிகளில் மட்டும் புதிய இணைப்புச் சாலை அமைத்தல் பணி முடிவுற்றது. 2014 – 2015 இல் ஒரு இரயில்வே மேம்பால பணி முடிவுற்றது.

செயலாக்கத்தில் உள்ள சில முக்கியப் பணிகளின் விவரம் பின்வருமாறு:–

## 2.3.1. சாலை மேம்பாலங்கள்

1. ஜி.என்.டி சாலை, மாதவரம் நெடுஞ்சாலை சந்திப்பில் மூலக்கடை பகுதியில் ரூ.49.55 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது,

2. அண்ணாநகர் 2வது நிழற்சாலை, திருமங்கலம் முகப்பேர் சாலை மற்றும் உள்வட்டசாலை சந்திப்பில் மேம்பாலப்பணி ரூ.60.23 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

3. வடபழனியில், உள்வட்டசாலை – என்.எஸ்.கே சாலை சந்திப்பில் மேம்பாலப்பணி ரூ.69.43 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

4. பெரியார் ஈ.வெ.ரா சாலையில் நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் அண்ணா வளைவில் அண்ணாநகர் 3–வது நிழற்சாலை சந்திப்புகளை இணைத்து மேம்பாலம் அமைக்கும் பணி ரூ.117 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

5. போரூரில் கோடம்பாக்கம் – திருப்பெரும்புதூர் சாலை, மவுண்ட் பூந்தமல்லி சாலை சந்திப்பில் ரூ.54.00 கோடி மதிப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

6. உள்வட்ட சாலையில் கொளத்தூர் பகுதியில் இரட்டை ஏரி அருகில் பெரம்பூர் செங்குன்றம் சாலை சந்திப்பில் ரூ.52.72 கோடி மதிப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 2.3.2. ஆற்றுப்பாலங்கள்

1. தாம்பரம் – முடிச்சூர்– ஸ்ரீபெரும்புதூர் சாலை கி.மீ.16/6 இல் பாலம் அமைக்கும் பணி ரூ.2 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது

2. பெரியார் ஈ.வெ.ரா.சாலையில், அமைந்தகரை அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே கூடுதல் மூன்று வழித்தட பாலம் அமைத்தல் பணி ரூ.8 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது

3. சிங்கபெருமாள் கோயில்–ஸ்ரீபெரும்புதூர்– திருவள்ளூர்– செங்குன்றம் சாலை கி.மீ.62/2இல் (மா.நெ.57) கூடுதலாக இரண்டு வழித்தடப் பாலம் அமைக்கும் பணி ரூ.2 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது

4. மவுண்ட் – பூவிருந்தவல்லி ஆவடி சாலை (மா.நெ.55) கி.மீ.3/4 இல் பாலம் அகலப்படுத்துதல் பணி ரூ.1 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது

5. மவுண்ட் – பூவிருந்தவல்லி ஆவடி சாலை (மா.நெ.55) கி.மீ.15/8 இல் கூடுதலாக இரண்டு வழித்தடப்பாலம் அமைக்கும் பணி ரூ.5 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

### 2.3.3. இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலம்/ கீழ் பாலம்

தண்டையார் பேட்டை– திருவொற்றியூர் இரயில்வே நிலையத்திற்கிடையில் திருவொற்றியூர் மாட்டு மந்தை கடவு எண்.3 இல் உயர்மட்ட பாலம் அமைத்தல் பணி ரூ.47.00 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

### 2.3.4. சாலை பணிகள்

1. சென்னை எண்ணூர் சாலையினை (மா.நெ. 114) இருவழிப் பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் (கிமீ 8/0–9/0) (சுங்கச்சாவடி– காலடிப்பேட்டை) பணி ரூ.4.89 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

2. சென்னை எண்ணூர் சாலையினை (மா.நெ. 114) இருவழிப் பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் (கிமீ 11/0–12/0) (அஜெக்ஸ் – விம்கோ பேருந்து நிறுத்தம்) பணி ரூ.9.86 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது

3. சென்னை எண்ணூர் சாலையினை (மா.நெ. 114) இருவழிப் பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் (கிமீ 12/0–13/0) (அஜெக்ஸ் – விம்கோ பேருந்து நிறுத்தம்) பணி ரூ.7.45 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

4. தரமணி இணைப்புச் சாலையை ஆறுவழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் பணி ரூ.32.23 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

### 2.3.5. விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

மேலும் Comprehensive Transportation Traffic Study (CTTS) பரிந்துரை மற்றும் போக்குவரத்து தேவையின் அடிப்படையில் கூடுதலாக தெரிவு செய்யப்பட்ட 13 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு மாநில அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவற்றுள் 9 பணிகளுக்கு நேர்பாடு பிரேரணை வழிகாட்டுதல் குழுவால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 9 பணிகளில் 7 பணிகளுக்கு அரசு கொள்கை அளவில் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது, இதில் 4 பணிகளுக்கு நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது, 1 பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 பணிகள் வடிவமைப்பு தயாரிக்கும் நிலையில் உள்ளது. திட்ட அறிக்கையின் அடிப்படையில் இப்பணிகள் எதிர்வரும் ஆண்டுகளில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 2.4. இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல்

இவ்வலகின் முக்கியப் பணியான இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டும் பணிகள் இரயில்வே துறையுடன் இணைந்து இரயில்வே பணித்திட்டத்தின் கீழ் 50:50 நிதி பங்களிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. பெரிய ஆற்றுப்பாலங்கள் கட்டுதல், சுற்றுச்சாலைகள் அமைத்தல் மற்றும் சாலை சந்திப்பை மேம்படுத்துதல் செய்தல் போன்ற பணிகளும் இவ்வலகால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இரயில்வே பணித்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளையும் சேர்த்து 103 சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் நிலுவைப்பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு 2014–15ஆம் ஆண்டில் ரூ.270.24 கோடி மதிப்பில் 14 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் 36 பணிகள் ரூ.1059.40 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பணிகள் கட்டுமான பணிக்கு முன்னதான பல்வேறு நிலைகளில் உள்ளன.

2012–13 ஆம் ஆண்டில் 12 மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் பணிகளுக்கு ரூ.100.90 கோடி மதிப்பில் முதற்கட்ட பணிகளுக்காக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இவற்றுள், திண்டுக்கல் மாவட்டத்தில் கடவு எண் 8க்கு பதிலாக சாலை மேம்பாலம் கட்ட ரூ.20.35 கோடி மதிப்பிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படும் நிலையில் உள்ளன.

2013–14 ஆம் ஆண்டில் 18 மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் பணிகளுக்கு ரூ.231.49 கோடி மதிப்பில் நில எடுப்பு, பயன்பாட்டு சாதனங்களை மாற்றி அமைத்தல், தள ஆய்வு போன்ற முதற்கட்ட பணிகளுக்காக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதற்கட்ட பணிகள் முடிந்தவுடன், பாலப் பணிகளை தொடங்குவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்படும் .

2014–15 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு **ரூ.241.31** கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.5. நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.5.1. பாலங்கள் கட்டுதல்

இத்திட்டத்தின் கீழ், நிலுவைப்பணிகளாக மூன்று ஆற்றுப்பாலங்கள் **ரூ.102.76 கோடி** மதிப்பில் 2014–15 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

2014–15 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு **ரூ.9.22** கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 2.5.2. அரசு சாலை மற்றும் கிராமச்சாலைகளில் பாலங்கள் கட்டுதல்

2014–15 ஆம் ஆண்டில் நிலுவையிலிருந்த மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கிய சாலை மற்றும் மாவட்ட இதர சாலைகளில் கட்டப்படும் ரூ.412.11 கோடி மதிப்பிலான 200 பாலப் பணிகள் மற்றும் 2014–15 இல் புதிதாக ஒப்பளிக்கப்பட்ட ரூ.293.47 கோடி மதிப்பிலான 94 பாலங்கள் ஆக மொத்தம் ரூ.705.58 கோடி மதிப்பிலான 294 பாலப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் 2014–15ஆம் ஆண்டில் ரூ.233.59 கோடி செலவில் 126 பாலப்பணிகள் முடிக்கப்பட்டது.

### 2.5.3. மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு

இத்திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி கடனுதவியுடன் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு செய்தல் மற்றும் பாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் ஆண்டில் நிலுவையிலிருந்த 8.70 கி.மீ நீளமுள்ள 2 சாலைப்பணிகள் (6.70 கி.மீ – உறுதிப்படுத்துதல்; 2.00 கி.மீ – அகலப்படுத்துதல்) ரூ.3.75 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவற்றில் 2014–15 ஆம் ஆண்டில் ரூ.0.95 கோடி செலவில் 8.70 கி.மீ நீளமுடைய 2 சாலைப் பணிகளும் (6.70 கி.மீ – உறுதிப்படுத்துதல்; 2.00 கி.மீ – அகலப்படுத்துதல்) முடிக்கப்பட்டது.

### 2.5.4. அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல்

2014–15 ஆம் ஆண்டில் நிலுவையிலிருந்த ரூ.4.24 கோடி மதிப்பிலான 1 பாலப் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2014–15 ஆம் நிதியாண்டில் ரூ. 0.42 கோடி செலவிடப்பட்டது.

### 2.5.5. கிராமச்சாலைகள் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களை இணைக்கும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மண் மற்றும் கப்பி சாலைகளை தார் சாலைகளாக மேம்பாடு செய்யும் பணிகள் மற்றும் பாலப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

2014–15 ஆம் ஆண்டில் நிலுவையிலிருந்த ரூ.1.53 கோடி மதிப்பிலான 1 பாலப் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2014–15 ஆம் நிதியாண்டில், ரூ. 0.25 கோடி செலவிடப்பட்டது.

## 2.6. முக்கிய நகரங்களில் புறவழிச்சாலைகள்

பெரிய நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைத்து மாற்றுப்பாதையில் செல்ல வழிவகை செய்வதில் புறவழிச்சாலைகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

2014–15 ஆம் ஆண்டில் ஓசூர் வட்டச்சாலைப் பணி முடிவுற்றது. இத்துறையின் மூலம் செயலாக்கப்படும் புறவழிச்சாலைகளின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 10: புறவழிச்சாலை பணிகளின் விவரம்**

| **விவரம்** | **எண்ணிக்கை** |
|---|---|
| முடிக்கப்பட்டவை | 29 |
| நடைபெற்றுவருபவை | 5 |
| நில எடுப்பு | 34 |
| விரிவான திட்ட அறிக்கை | 16 |
| பரிசீலனையில் உள்ளவை | 3 |
| **மொத்தம்** | **87** |

தஞ்சாவூர் நகருக்கு புறவழிச்சாலை (கட்டம் II) கி.மீ.0/0–9/0 வரை அமைக்கும் பணி ரூ.88 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. எடப்பாடி நகருக்கு புறவழிச்சாலை அமைக்க ரூ.38.93 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

2015–16ஆம் ஆண்டில் தஞ்சாவூர் புறவழிச்சாலை கட்டம்–II இல் கி.மீ. 9/0 –14/265 வரை ரூ.42 கோடி மற்றும் பட்டுக்கோட்டை புறவழிச்சாலை கட்டம்– II இல் கி.மீ. 4/2 – 7/4 வரை ரூ.21.90 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் வாலாஜாபாத் மற்றும் கமுதி நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு ரூ. 67.83 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேட்டுப்பாளையம், திண்டுக்கல், துறையூர் கட்டம் II ஆகிய புறவழிச்சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 2.7. சுனாமி மறுவாழ்வு திட்டம்

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் கீழ் 2014–15 ஆம் ஆண்டில் நிலுவையிலிருந்த ரூ.75.84 கோடி மதிப்பிலான 13 பாலப்பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றில் 5 பாலப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், ரூ.33.18 கோடி செலவிடப்பட்டுள்ளது.

நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின் கீழ் 2014–15 ஆம் ஆண்டில் நிலுவையிலிருந்த ரூ.11.11 கோடி மதிப்பிலான 2 பாலப்பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. நடைபெற்று வரும் 2 பாலப்பணிகளும், நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்ததும், முடிக்கப்படும். 2014–15 ஆம் நிதியாண்டில் ரூ. 3.06 கோடி செலவிடப்பட்டது.

## 2.8. விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதியில் புதிய பணிகள்

விரிவாக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி பகுதியில் 250.91 கி.மீ நீளமுள்ள சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ளன. இச்சாலைகள் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களில் அமைந்துள்ளன.

2014–2015 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது விதி 110இன் கீழ் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் "விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி எல்லைப் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத் துறையின் 250 கிலோ மீட்டர் சாலைகளில் விளிம்பு வரைஅகலப்படுத்தும் பணிகள், வடிகால் வசதியுடன் கூடிய நடைபாதைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் இதற்கு மொத்தம் ரூ. 1033 கோடி மதிப்பில் பணிகளை மேற்கொள்ள கண்டறியப்பட்டுள்ளன எனவும் முதற்கட்டமாக, இந்த ஆண்டு ரூ.250 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி ரூ.250 கோடி மதிப்பில் மாநில நெடுஞ்சாலைகளில் 7 பணிகள், மாவட்ட முக்கிய சாலைகளில் 3 பணிகள், மாவட்ட இதர சாலைகளில் 4 பணிகளில் சாலையின் விளிம்பு வரை அகலப்படுத்துதல், வடிகால் அமைத்தல், நடைபாதை அமைக்கும் பணி ஆகிய பணிகள் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது, இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.9. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC)

சாலைகளின் மேலாண்மை மற்றும் பராமரிப்புப் பணிகளை திறன்படவும் மற்றும் பயனுள்ள வகையில் மேம்படுத்தவும் செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் உதவுகிறது. ஒப்பந்த காலத்தில் சாலை பயன்படுத்துவோருடைய பயண வசதிகளை நிர்ணயித்த அளவில் பாதுகாப்பதற்கு, செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் உதவுகிறது.

பொள்ளாச்சி கோட்டத்தில் 191.40 கி.மீ நீளமுடைய மாநில நெடுஞ்சாலைகளிலும் மற்றும் 185.98 கி.மீ நீளமுடைய மாவட்ட முக்கியச் சாலைகளிலும் மொத்தம் ரூ.233.93 கோடி மதிப்பிற்கு ஐந்தாண்டு காலத்திற்கு "செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்" நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது, முதல் நிலை சீரமைப்புப் பணிகள், காலமுறைப் புதுப்பித்தல், சிறு மேம்பாடுகள், சாதாரண பராமரிப்பு மற்றும் அவசர காலப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 307 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும் 274 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகளும் ரூ.450 கோடி மதிப்பில், "செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்" திட்டத்தின் கீழ் பராமரிப்பினை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆரம்பகட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 229 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும் 340 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகளும் "செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்" திட்டத்தின் கீழ் பராமரிப்பினை மேற்கொள்ள ரூ.460 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆரம்பகட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 2.10. சாலை பாதுகாப்பு பணிகள்

அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் கண்டறிவது விபத்துக்கான காரணங்களை ஆராய்வது, விபத்துகளைத் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது போன்ற செயல்களே சாலை விபத்துகளைக் குறைப்பதற்கான சிறந்த அணுகுமுறையாக கருதப்படுகிறது. ஆபத்து விளைவிக்கக் கூடிய சாலைப்

பகுதிகளில் சரியான சாலை வடிவமைப்பு மற்றும் போக்குவரத்து மேலாண்மை முறைகளை செயற்படுத்துவதால் சாலைப் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க நன்மைகள் விளையும் என்பது உண்மையாகும். இவ்வாறு அடிக்கடி விபத்து நிகழக்கூடிய பகுதிகளில் குறைந்த செலவில் மேற்கொள்ளப்படும் மேம்பாடுகள் அதிக அளவில் பயனளிக்கக்கூடியதாக அமைகின்றன.

சாலை விபத்துகளை குறைக்கவும் மற்றும் சாலையின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தவும் நகரப் பகுதிகள் உட்பட அடிக்கடி விபத்து நிகழும் இடங்களை மேம்படுத்தவும் அரசால் ஒரு சிறப்பு திட்டம் அறிவிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.245.30 கோடி மதிப்பில் சிறு பாலங்கள் அகலப்படுத்துதல், உலோக தடுப்பான் அமைத்தல், சாலை சந்திப்பினை மேம்படுத்துதல், பாதுகாப்பு சுவர் கட்டுதல் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சாலை பாதுகாப்பினை மேம்பாடு செய்வதற்காக ரூ.200 கோடி மதிப்பில் குறுகிய சிறுபாலத்தை அகலப்படுத்துதல், சாலை ஓரங்களில் உள்ள திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஏரிக்கரைகளில் பாதுகாப்பு / தடுப்பு சுவர் அமைத்தல், சாலை மையக்கோடு மற்றும் ஒளிமிகள் (studs) அமைத்தல், சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல் பணிகளை மேற்கொள்ள அரசு கூடுதலாக ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 2.11. தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள்

தமிழ்நாட்டில் மொத்தம் 5004 கி.மீ நீள தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. இவற்றில் 1998 கி.மீ நீள தேசிய நெஞ்சாலைகள் மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம், பராமரிக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 3006 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் பராமரிக்கப்படுகின்றன.

### 2.11.1. தேசிய நெடுஞ்சாலை திட்டப் பணிகள்

2014–15 ஆம் ஆண்டில் ரூ.751.27 கோடி மதிப்பிலான 351.95 கி.மீ. நீள 43 சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 11 பாலப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும் ஆண்டுத் திட்டம் 2014–15 இன் கீழ் மைய

அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ரூ.814.05 கோடி மதிப்பிலான 14 சாலைப் பணிகள் மற்றும் 7 பாலப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட பணிகளில் 2014–15 ஆம் ஆண்டில் 98.31 கி.மீ நீள 27 சாலைப் பணிகள் மற்றும் 8 பாலப்பணிகள் ரூ.167.12 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### 2.11.2. தேசிய நெடுஞ்சாலை – திட்டம் சாராப் பணிகள்

காலமுறை புதுப்பித்தல் / ஓடுதள தரத்தை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் 2014–15ஆம் ஆண்டில் ரூ.82.62 கோடி மதிப்பிலான 180.25 கி.மீ. நீளமுள்ள 13 சாலைப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

மேலும் மைய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் காலமுறை புதுப்பித்தல் / ஓடுதள தரத்தை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ரூ.157.85 கோடி மதிப்பிலான 254.69 கி.மீ. நீள 12 புதிய சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியது. மேற்குறிப்பிட்ட பணிகளில் 2014–15 ஆம் ஆண்டில், 309.85 கி.மீ நீள 16 சாலைப் பணிகள் ரூ.164.15 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

## 2.12. மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டங்கள்

### 2.12.1. புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம்

2014–15 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.209.88 கோடி மதிப்பிலான 286.43 கி.மீ நீளமுள்ள 26 சாலைப் பணிகள் மற்றும் ஒரு பாலப் பணி நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

இவற்றில், 2014–15 ஆம் ஆண்டில் 242.13 கி.மீ நீள 23 சாலைப் பணிகள் ரூ. 158.31 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஒரு சாலைப்பணி நில எடுப்பு நிலையில் உள்ளது.

### 2.12.2. மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் ஆண்டில் ரூ.39.03 கோடி மதிப்பிலான 44.89 கி.மீ நீள 5 சாலைப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

இப்பணிகள் அனைத்தும் இந்நிதியாண்டில் ரூ.37.60 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### 2.12.3. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் ஆண்டில் ரூ.1.44 கோடி மதிப்பிலான 4.40 கி.மீ. நீள 4 சாலைப் பணிகள் மற்றும் 2 வடிகால் அமைக்கும் பணிகள், பாதுகாப்புப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

இது தவிர, 2014–15 ஆம் ஆண்டில் 2.80 கி.மீ. நீள 3 புதிய சாலைப் பணிகள் மற்றும் 4 பாவுகற்கள், வடிகால் அமைக்கும் பணிகள், பாதுகாப்புப் பணிகளை ரூ.2.20 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் அனைத்தும் இந்நிதியாண்டில் ரூ. 3.64 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### 2.12.4. பிரதம மந்திரி கிராமப்புறச் சாலை அபிவிருத்தித் திட்டம் – பகுதி VIII (2012–13)

இத்திட்டத்தின் கீழ், ரூ. 278.54 கோடி மதிப்பிலான 1062.55 கி.மீ. நீளமுள்ள 330 மாவட்ட இதர சாலை மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில், 1053.35 கி.மீ நீள 326 மாவட்ட இதர சாலைப் பணிகள் ரூ.270.62 கோடி செலவில் இதுவரை செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### 2.12.5. பிரதம மந்திரி கிராமப்புறச் சாலை அபிவிருத்தித் திட்டம் – பகுதி IX (2014–15)

இத்திட்டத்தின் கீழ் ரூ.49.20 கோடி மதிப்பிலான 170.335 கி.மீ நீள 59 மாவட்ட இதர சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இந்நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

## 2.13. ஏனைய சிறப்புத் திட்டங்கள்

### 2.13.1. பள்ளிப்பாளையத்தில் சாலை மேம்பாலம் கட்டுதல்

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் மாநில நெடுஞ்சாலை 79 இல் கி.மீ. 90/2–ல் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கு 2013–14 இல், ரூ.40.16 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**2.13.2. ஆம்பூரில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்**

வேலூர் மாவட்டத்தில், ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி இரயில்வே நிலையங்களுக்கிடையே பெத்தலேகம் பகுதியில் இரயில்வே மேம்பால முதற்கட்ட பணிகளுக்காக ரூ.6.97 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வைப்பு நிதியில் வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பணிகள் முடிந்தவுடன் பணிக்கான நிர்வாக ஒப்புதல் கோரப்படும்.

**2.13.3. சென்னை வெளிவட்டச் சாலை**

***2.13.3.1. சென்னை வெளிவட்டச் சாலை – கட்டம் I***

சென்னை வெளிவட்டச் சாலை கட்டம்–I இல், 29.65 கி.மீ. நீளத்திற்கு தே.நெ. 45 இல் உள்ள வண்டலூர் முதல் தே.நெ. 4 இல் நசரத்பேட்டை வழியாக தே.நெ. 205 இல் உள்ள நெமிலிச்சேரி வரை ரூ.1081.40 கோடி மதிப்பில் இருபுறம் மூன்று வழிச்சாலைகளைக் கொண்ட பசுமைத் திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டத்தின் செயல்பாட்டினை நிர்வகிக்கும் அமைப்பாக நியமிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் முடிக்கப்பட்ட மண்ணிவாக்கம் முதல் நெமிலிச்சேரி வரையான 27 கி.மீ. சாலைப் பகுதி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் திருக்கரங்களால் 28.08.2014 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

***2.13.3.2. சென்னை வெளிவட்டச் சாலை – கட்டம் II***

சென்னை வெளிவட்டச் சாலையினை இரண்டாம் கட்டமாக நெமிலிச்சேரி (தே.நெ. 205) முதல் பாடியநல்லூர் (தே.நெ. 5) வழியாக திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையில் 30.50 கி.மீ. நீளம் கொண்ட ஆறு வழித்தடச் சாலையாக ரூ.1075 கோடி மதிப்பீட்டில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி ஆதாரம், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் (DBFOT) அரையாண்டு ஈவுத்தொகை வழங்கும் முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டத்தின் செயல்பாட்டினை நிர்வகிக்கும் அமைப்பாக நியமிக்கப்பட்டுள்ளது.

சென்னை வெளிவட்டச் சாலை இரண்டாம் கட்டப் பணிகள் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் திருக்கரங்களால் 28.08.2014 அன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டது.

தற்போது 55 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் செப்டம்பர் 2016 இல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.13.4. எண்ணூர் மணலி சாலை மேம்பாட்டு திட்டம் (Ennore Manali Road Improvement Project)

இத்திட்டம் அமைந்துள்ள சுமார் 30 கி.மீ சாலையினை தங்கு தடையற்ற சாலைப் போக்குவரத்திற்கு ஏதுவாகவும், சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகத்தினை தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் வகையிலும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது எண்ணூர் விரைவுச் சாலை, மணலி எண்ணெய் சுத்திகரிப்பு சாலை, உள்வட்டச் சாலையின் வடக்கு பகுதி மற்றும் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலை ஆகிய சாலைகளைக் கொண்டதாகும்.

இத்திட்டத்தினை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI), தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தை நிர்வகிக்கும் அமைப்பாக (Managing Associate) நியமித்து, தற்போது திட்டங்களில் ஏற்பட்ட மாறுதல்களின் அடிப்படையில், கண்காணிப்பு ஆலோசகராக நியமித்துள்ளது.

இதுவரை 90 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

மேலும், எண்ணூர் எக்ஸ்பிரஸ்வே சாலை விரிவாக்கப் பகுதியில் வசித்த 1824 குடும்பங்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் எர்ணாவூரில் குடியிருப்புகள் கட்டப்பட்டு அதில் 1814 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

### 2.13.5. வடசென்னை அனல் மின் நிலைய சாலை (அத்திப்பட்டு ரயில்வே மேம்பாலம் உட்பட) மற்றும் எண்ணூர் துறைமுக சாலைகளை மேம்படுத்துதல்/

திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையில் கி.மீ 6/15 இல் உள்ள ஆண்டார் குப்பத்தில், ஜப்பான் நாட்டு நிறுவனமான திருவாளர்கள். தோஷிபா–

JSW (கூட்டு நிறுவனம்) டர்பைன் மற்றும் ஜெனரேட்டர் என்கிற தனியார் நிறுவனம் உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது. கனரக சிறப்புப் போக்குவரத்து வாகனங்கள் (525 மெட்ரிக் டன்) எண்ணூர் துறைமுகத்தை அடைய திருவொற்றியூர் – பொன்னேரி– பஞ்செட்டி சாலையில் 7.35 கி.மீ. தூரமும் வடசென்னை அனல் மின் நிலையச் சாலையில் 4.8 கி.மீ. தூரமும் எண்ணூர் துறைமுகச் சாலையில் 2.4 கி.மீ. தூரமும் பயணிக்க வேண்டியுள்ளது. மேற்குறிப்பிட்ட மூன்று சாலைகளில் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலை எண்ணூர் – மணலி சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக தனித்தன்மை வாய்ந்த இத்திட்டத்தின் கீழ் 525 மெட்ரிக் டன் எடையுள்ள கனரக சிறப்புப் போக்குவரத்து வாகனங்கள் கடந்து செல்லும் வகையில் கடற்பகுதிக்கு அருகாமையில் உள்ள கடினமான நிலப்பரப்பு மற்றும் பகுதிகள் ஆகியவற்றில் ஏற்படும் பெருத்த சவால்களை வெற்றிகரமாக எதிர் கொண்டு உயர்ந்த தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி இரயில்வே மேம்பாலம் உள்ளடக்கிய சாலை மற்றும் பாலங்கள் அமைக்கும்பணி முடிக்கப்பட்டு, அனைத்து பாலங்களும் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டன.

மற்ற இரண்டு சாலைகளான,

(i) வடசென்னை அனல் மின்நிலையச் சாலை கி.மீ0/0 – 4/8 மற்றும்
(ii) எண்ணூர் துறைமுகச் சாலை கி.மீ. 0/0 – 2/4

இத்திட்டத்தினை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் நிர்வகிக்கும் அமைப்பாக செயல்படுத்தி வருகிறது. தற்போது 98 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

### 2.13.6. வடக்கு துறைமுக இணைப்புச் சாலை (சென்னை எல்லைச் சாலை கட்டம்–1)

அனைத்து விதமான சரக்கு பரிமாற்றங்களை கையாள்வதன் மூலம் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் எண்ணூர் மற்றும் காட்டுப்பள்ளி ஆகிய துறைமுகங்களின் முக்கிய இணைப்புச் சாலையாக வடக்குத் துறைமுகச் சாலை உள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த புதிய சாலையானது எண்ணூர் துறைமுகத்தின் வடக்கு நுழைவு வாயிலையும், தேசிய நெடுஞ்சாலை 5 இல் அமைந்துள்ள தச்சூரையும் இணைப்பதுடன் கூடுதலாக திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி

சாலையையும் இணைக்கும் இணைப்புச் சாலையாக அமையும். மேலும் இச்சாலை சமீபத்தில் மேம்படுத்தப்பட்ட காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் துறைமுகத்தின் சாலைத் தேவைகளையும் பூர்த்தி செய்யும்.

எண்ணூர் துறைமுகத்தையும், தச்சூரையும் இணைக்கும் இச்சாலையின் மொத்த நீளம் 21.15 கி.மீ. ஆகும். திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி இணைப்புச் சாலையின் நீளம் 4.35 கி.மீ. ஆகும். இப்பணிகள் இரண்டு கட்டங்களாக கீழ்க்குறிப்பிட்டவாறு நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**கட்டம் – I**

எண்ணூர் துறைமுக வாயிலிலிருந்து நெய்தவாயல் கிராமம் வரை (கி.மீ. 0/0 முதல் கி.மீ. 6/200) மற்றும் நெய்தவாயல் கிராமம் முதல் வள்ளூர் வரையான இணைப்புச் சாலை (கி.மீ. 4.350) ஆகமொத்தம் 10.550 கி.மீ நீளமுள்ள சாலை அமைக்கும் பணி முதற்கட்டமாகும்.

**கட்டம் – II**

நெய்தவாயல் முதல் தே.நெ. 5 இல் தச்சூர் வரை 14.95 கி.மீ நீளமுள்ள சாலை அமைக்கும் பணி இரண்டாம் கட்டமாகும்.

நில எடுப்பிற்கான உத்தேச செலவினத் தொகையாக கட்டம்–1க்கு ரூ.360 கோடி தொகையும் மற்றும் கட்டம்–2க்கு ரூ.900 கோடி தொகையும் மதிப்பிடப்பட்டு மாநில அரசின் நிதி ஆதாரத்தின் மூலமாக செயல்படுத்தப்படவுள்ளது.

**2.13.7. அக்கரை முதல் மாமல்லபுரம் வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலையில் கி. மீ. 22/ 300 முதல் கி.மீ. 55/ 800 வரை உள்ள நான்கு வழிப்பாதையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி மற்றும் கி.மீ. 55/800 முதல் கி.மீ. 135/500 வரையுள்ள 13 வளைவுகள், 7 சந்திப்புக்கள் மேம்படுத்துதல்**

கிழக்கு கடற்கரைச் சாலை, அக்கரையிலிருந்து புதுச்சேரி மாநில எல்லை வரை, கடின புருவங்களுடன் கூடிய இருவழிச் சாலையாக மேம்படுத்தப்பட்டு, 2002 ஆம் ஆண்டு முதல் சுங்கச் சாலையாக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து வளர்ச்சியின் அடிப்படையிலும், சாலையில் மையத்தடுப்பு இல்லாமையால் அதிகரித்துவரும் விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டும் இச்சாலையினை முதற்கட்டமாக, மையத்

தடுப்புடன் கூடிய நான்கு வழிப் பாதையாக விரிவுபடுத்தவும், தேவைப்படும் இடங்களில் வளைவுகளை நேர்படுத்தவும் அவசியம் ஏற்பட்டது.

அதனால் ரூ 272.10 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்தொகையில் 40 விழுக்காடு மதிப்பாக ரூ.108.84 கோடியை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்திற்கு அரசு வழங்கவுள்ளது. எஞ்சிய தொகையை இந்நிறுவனம் திரட்டிக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பணி 28.2.2014 இல் தொடங்கப்பட்டு, தற்போது 50 விழுக்காட்டிற்கும் மேலாக பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் பிப்ரவரி 2016 இல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.13.8. சென்னை – கிழக்கு கடற்கரை சாலையில் புதிய நான்குவழி உயர்மட்ட பாலாறு பாலம்

சென்னை – கிழக்கு கடற்கரை சாலையில், வயலூர் அருகில் (கி.மீ. 76/0) ரூ.134 கோடி மதிப்பில், தற்போதுள்ள பாலாறு பாலத்தை புதுப்பிக்கவும், கூடுதலாக இருவழிப்பாலம் அமைக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கட்டுமான மதிப்பீட்டான ரூ.85.19 கோடியை உள்ளடக்கி, மேற்பார்வை கட்டணம், தரக்கட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு போன்ற செலவினங்களை சேர்த்து, இதன் திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.105.20 கோடி ஆகும். இதன் திட்ட நிறைவு காலம் 2 ஆண்டுகள். தற்போது 70 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் மார்ச்–2016 க்குள் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### 2.13.9. இராஜீவ்காந்தி தகவல் தொழில் நுட்ப விரைவுச்சாலை

**கட்டம்–1**

இராஜீவ்காந்தி சாலை (தகவல் தொழில் நுட்ப விரைவுச் சாலை) கட்டம்–1 இன் கீழ் சென்னை அடையாறு மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான 20.10 கிமீ நீளத்திற்கு இரட்டை மூன்று வழிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர் மற்றும் கிழக்கு கடற்கரை சாலையினை இணைக்கும் 2.15 கி.மீ நீள இணைப்புச் சாலையும் இத்திட்டத்தின் மூலம் நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. இச்சாலை சுங்கச் சாலையாக பராமரிக்கப்படுகிறது.

**கட்டம்–2**

இராஜீவ் காந்தி சாலையினை மகாபலிபுரம் வரை விரிவாக்கம் செய்யும் நோக்கத்தில் 25 கி.மீ நீளத்திற்கு (சிறுசேரி முதல் மகாபலிபுரம் வரை) ஆறு வழிப்பாதை மற்றும் இரண்டு புறவழிச்சாலைகளுடன் (திருப்போரூர் மற்றும் கேளம்பாக்கம் பகுதிகளில்) கூடிய இராஜீவ் காந்தி சாலை பகுதி–IIஐ விரிவுபடுத்த பொது–தனியார் பங்கேற்புடன் சாத்தியமான நிதிபங்களிப்பு முறையில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு ரூ.294.68 கோடி அனுமதிக்கப்பட்டு சிறுசேரி முதல் பூஞ்சேரி வரையிலான 13 கிராமங்களில் 60 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவாக்கம் செய்ய தேவைப்படும் 88.62 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களில் இதுவரை 7 கிராமங்களில் 32.40 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலம் கையகப்படுத்தும் பணி வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

மேலும், இந்த திட்டத்திற்கான ‘‘விரிவான திட்ட அறிக்கை’’ (DPR) நுண்ணாய்வில் உள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூ.573.99 கோடி ஆகும். இத்திட்டத்தின் முதல் பகுதியாக கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் நகரங்களில் இரண்டு புறவழிச்சாலைகள் அமைத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 2.13.10. *சிறுசேரியில் பல்லடுக்கு வாகன நிறுத்தம் (Multilevel Car parking)*

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அறிவித்தவாறு, சென்னை – தகவல் தொழில்நுட்ப துரித சாலையில் உள்ள சிறுசேரியில், ரூ.200 கோடி மதிப்பீட்டில், 2000 சீருந்துகள் மற்றும் ஒரே நேரத்தில் 50 பேருந்துகள் நிறுத்தும் வகையில் 20 தளங்களுடன்கூடிய பல்லடுக்கு வாகன நிறுத்தம் பொது–தனியார் பங்களிப்பு முறையில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டம் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்கம் மற்றும் பரிமாற்றம் (DBFOT) என்ற அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான ‘‘விரிவான சாத்தியக்கூறு அறிக்கை’’ (DFR) பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

**2.13.11. உயர் மட்ட சாலை (Elevated Road)**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அறிவித்தவாறு, தரமணி முதல் சிறுசேரி வரை முதல் கட்டமாகவும், சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை இரண்டாவது கட்டமாகவும் மொத்தம் 45 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் திட்டத்திற்கான ‘‘விரிவான திட்ட அறிக்கை’’ (DPR) தயார் செய்ய ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

‘‘விரிவான திட்ட அறிக்கை’’ (DPR) தயாரிக்கும் பணி முதல் கட்டத்திற்கு செப்டம்பர் 2015க்கு முன்னதாகவும் இரண்டாம் கட்டத்திற்கு ஜீன் 2016க்கு முன்னதாகவும் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**2.13.12. ஈரோடு மாவட்டத்தில் சாலை மேம்பாலம் கட்டுதல்**

ஈரோடு – பெருந்துறை – காங்கேயம் சாலையில் கி.மீ.1/8 இல் அரசு மருத்துவமனை சந்திப்பில் சாலை மேம்பாலம் கட்டுவதற்காக ரூ.22.93 கோடி மதிப்பில் முதற்கட்ட பணிகளுக்காக அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு பணிகள் முடிந்த பிறகு பணிக்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்படும்.

**2.13.13. ஈரோடு வெளிவட்டச் சாலை அமைக்கும் பணி**

ஈரோடு நகரில் வெளிவட்ட சாலை அமைக்க மூன்றாவது கட்டமாக கி.மீ.7/6 முதல் 14/8 வரை 7.2 கி.மீ க்கு சாலை அமைத்தல் மற்றும் கி.மீ.11/2–11/6 இல் சாலை மேம்பாலம் அமைத்தல் உட்பட ரூ.69.30 கோடி மதிப்பிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**2.13.14. கரும்புச் சாலைகள் அபிவிருத்தி திட்டம்**

வேளாண்மைத்துறை மூலம் கரும்பு ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும் தீர்வையைப் (cess fund) பயன்படுத்தி கரும்பு விளையும் பகுதியிலிருந்து , கரும்பு ஆலைகளுக்கு கரும்பு கொண்டு செல்வதற்கு சாலைகள் அமைக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 9 சாலை பணிகள் மற்றும் ஒரு உயர்மட்டப்பாலம் ரூ 14.40 கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 7 பணிகள் ரூ.9.04 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்றுவருகின்றன.

## 2.13.15. ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்பு திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் பகுதிகளில் பெருகி வரும் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்ப சாலை மற்றும் பால கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக ரூ.300 கோடி மதிப்பிலான சாலைப்பணியினை 2005–06 ஆம் ஆண்டிலும், இரண்டாம் கட்டப்பணிகள் 2011 –12 இல் ரூ 86.65 கோடி மதிப்பீட்டிலும், மூன்றாம் கட்டப்பணிகள் 2014–15 இல் ரூ.115 கோடி மதிப்பீட்டிலும், மேற்கொள்ள திட்டமிடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு தற்போது முதற்கட்டப்பணி ரூ.547.82 கோடி திருத்திய மதிப்பீட்டிலும் இரண்டாம் கட்டப்பணி ரூ.108.66 கோடி திருத்திய மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகிறது.

### *2.13.15.1. ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்புத் திட்டம் – கட்டம் – I*

முதற்கட்டமாக கீழ்க்கண்ட பணிகள் செயலாக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது:

1. சிங்கப்பெருமாள்கோயில் – திருப்பெரும்புதூர் சாலையினை மத்திய தடுப்புடன் கூடிய நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல் (SH–57) கி.மீ 0/6 முதல் 24/6 வரை – 24 கி.மீ,
2. வண்டலூர் வாலாஜாபாத் சாலையினை மத்திய தடுப்புடன் கூடிய நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல் (SH–48) கி.மீ 30/4 முதல் 63/8 வரை– 33.4 கி.மீ
3. ஒரகடம் கூட்டுச்சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டுதல்

மொத்தமுள்ள 57.4 கி.மீ முதற்கட்டப்பணியில் 44.60 கி.மீ நீளத்திற்கு பணிகள் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள 12.80 கி.மீ சாலையில், 9.40 கி.மீ பணி நடைபெற்று வருகிறது. நில எடுப்பு பணி முடிவு பெற்றவுடன் மீதமுள்ள 3.40 கி.மீ சாலைப்பணி முடிக்கப்படும். ஒரகடம் சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி நிறைவு பெற்று போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டது.

முதற்கட்டப்பணிகள் அனைத்தும் 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிக்க திட்டமிடப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. முதற்கட்டப்பணியில் இது வரை ரூ.451.23 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதில் ரூ.184.62 கோடி நில எடுப்பிற்காக உள்ள தொகையும் அடங்கும்.

### *2.13.15.2. ஓரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்புத் திட்டம் – கட்டம் - II*

இரண்டாம் கட்டமாக சிங்கப்பெருமாள்கோயில் முதல் திருப்பெரும்புதூர் சாலை நான்கு வழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி, கி.மீ 12/6 முதல் 24/ 6 வரை (12.00 கி.மீ) மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாம் கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. மொத்தமுள்ள 12.00 கி.மீ நீள சாலையில் 10.00 கி.மீ சாலை பணிகள் முடிவு பெற்றுள்ளது. மீதமுள்ள பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகிறது. இது வரை ரூ.75.51 கோடி செலவிடப்பட்டுள்ளது. திருப்பெரும்புதூர் சாலையில் நில எடுப்புப் பணிகள் உள்ள பகுதி தவிர ஏனைய பணிகள் இந்த நிதியாண்டில் முடிக்கப்படும்.

### *2.13.15.3 ஓரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்புத் திட்டம் – கட்டம் - III*

மூன்றாம் கட்டப்பணியாக சிங்கப்பெருமாள்கோயில் முதல் திருப்பெரும்புதூர் சாலை வரை கி.மீ 0/6 முதல் 12/6 வரை நான்கு வழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** விதி 110ன் கீழ் 25.07.2014 அன்று அறிவிக்கப்பட்டது. நிர்வாக ஒப்புதல் ரூ.115.00 கோடிக்கு வழங்கப்பட்டு தற்போது இரண்டு தொகுதிகளுக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## 2.14. வடிவமைப்பு முடிக்கப்பட்ட பணிகள்

2014–2015 ஆம் ஆண்டில் இருப்புப்பாதை கடவுகளில் 14 மேம்பாலங்கள், 42ஆற்றுப் பாலங்கள் ஆகியவற்றிற்கு வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் பணிகளும், அரசால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட வடிவமைப்பு, வரைபடம் போன்றவற்றை சரிபார்த்தல் பணியில் இருப்புப் பாதை கடவுகளில் 2 மேம்பாலங்கள், 22 ஆற்றுப்பாலங்கள், 2 பாதசாரிகளுக்கான மேம்பாலங்கள், சாலைசந்திப்புகளில் 4 பல்வழிச் சாலை மேம்பாலங்கள், 2 பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதைகள், நெடுஞ்சாலை ஆராய்ச்சி வளாகத்தில் 1 பயிற்சிக்கூடம் மற்றும் 9 பாலப் பணிகளுக்கு மாற்று வடிவமைப்புகள் ஆக மொத்தம் 96 பாலப் பணிகளுக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்/சரிபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## 2.15. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் (TNRSP)

நெடுஞ்சாலைத்துறையின் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட முதல் அலகு மூலம் உலக வங்கி கடனுதவியின் கீழ் 725 கி.மீ நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்தல், 1330 நீளமுள்ள சாலைகளை சிறப்பு பராமரித்தல், சாலை பாதுகாப்பு, கரும்புள்ளி மேம்படுத்துதல், நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் கொள்கைகள் வகுத்தல் ஆகிய பணிகள் ரூ.2442 கோடி திட்ட மதிப்பில் வெற்றிகரமாக 2004 முதல் 2012 வரை செயல்படுத்தப்பட்டது. மீதமுள்ள வேலைகளான இராமநாதபுரம் புறவழிச்சாலை **இரயில்வே மேம்பாலத்தை உறுதிப்படுத்துதல்** மற்றும் கும்பகோணம் புறவழிச்சாலையின் அனைத்து பணிகளும் 2014–15 ஆம் வருடத்தில் முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட முதல் அலகு பணிகள் வெற்றிகரமாக முடித்த பின் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II இன் கீழ் பணிகளை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளும் பொருட்டு, உலக வங்கியின் மூலம் சாலைகள் முன்னுரிமை தேர்வுக்கான சாத்தியகூறு அறிக்கை தயாரிக்கும் பணி இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை (IIT Madras) மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 2867 கி.மீ நீளமுள்ள சாலைகளை ஆய்வுக்கு உட்படுத்தி, பொருளாதார முன்னுரிமை அடிப்படையில் சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் சுமார் 2079 கி.மீ. நீளம் உள்ள சாலைகளை மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு வாரியத்தின் மூலம் ரூ.65 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தேர்வு செய்யப்பட்டுள்ள சாலைகளில் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக ஐந்து ஆலோசக நிறுவனர்களிடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றில் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி 575 கி.மீ. சாலைகளுக்கு நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள சாலைகளின் திட்ட அறிக்கைத் தயாரிக்கும் பணி விரைவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கியின் மதிப்பீட்டுக் குழுவினால் முதற்கட்ட செயல்பாட்டிற்கான திட்ட ஆய்வு டிசம்பர் 2014 இல் முடிக்கப்பட்டுள்ளது. கடன் மற்றும் திட்ட ஒப்பந்தங்கள் 28.05.2015 இல் கையெழுத்திடப்பட்டது. கடன் ஒப்பந்தம் 10.07.2015

முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் அடிப்படையில் உலக வங்கி கீழ்கண்ட மூன்று ஒப்பந்த அணுகுமுறைகளுக்கு நிதி வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

- **பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் வகை ஒப்பந்தம் (EPC)**

பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் வகை ஒப்பந்தம் மூலம் சுமார் 427கி.மீ நீளமுள்ள முக்கிய சாலை வலையமைப்புகளை கடினபுருவம் கொண்ட இருவழிச் சாலைகளாக அகலப்படுத்துதல் மற்றும் தரம் உயர்த்துதல் ரூ. 2414 கோடியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகையில் சாலை மேம்பாட்டிற்குப்பின் 5 வருட கால பராமரிப்பும் உட்பட்டதாகும்.

- **பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு (PPP)**

பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு (PPP) **மூலம் மாற்றியமைக்கப்பட்ட சந்தா ஒப்பந்த முறை** மூலம் சுமார் 145 கி.மீ நீளமுள்ள முக்கிய சாலை வலையமைப்புகளை நான்கு வழிச் சாலைகளாக அகலப்படுத்தி, தரம் உயர்த்துதல் மற்றும் மேம்பாடு முடிந்த பின் பராமரிப்பு ஆகிய பணிகளுக்காக ரூ.1499 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- **வெளியீடு மற்றும் செயல்திறன் அடிப்படையிலான சாலை பராமரிப்பு**

வெளியீடு மற்றும் செயல்திறன் அடிப்படையிலான சாலை பராமரிப்பு ஒப்பந்தம் மூலம் சுமார் 597 கி.மீ நீளமுள்ள முக்கிய சாலை வலையமைப்புகளுக்கு ஐந்து ஆண்டுக்கான பராமரிப்பு தொகை ரூ.229 கோடி ஆகும்.

உலக வங்கி உதவி மூலம் சாலை மேம்பாட்டு வேலைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளான பரிவர்த்தனை ஆலோசனை, தரக் கட்டுப்பாடு மேற்பார்வை மற்றும் ஆலோசனை சேவைகள் ஆகியவையும் செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டத்தில் சாலை உபயோகிப்பாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் சாலைகள் வடிவமைத்து செயல்படுத்தப்படும்.

''பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான வகை'' ஒப்பந்தத்தின் கீழ் 10 கூறுகளாக 427கி.மீ. இருவழிச் சாலைகளை மேம்படுத்துவதற்கு,

ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. 597 கி.மீ. சாலைகளை ''வெளியீடு மற்றும் செயல்திறன் அடிப்படையிலான சாலை ஒப்பந்தத்தின்'' கீழ் பராமரிப்பு செய்வதற்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு தற்போது பரிசீலனை நிலையிலுள்ளன. பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான வகை (EPC) ஒப்பந்த வேலையை மேற்பார்வை செய்ய மூன்று மேற்பார்வை ஆலோசகர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் மற்றும் ''தனியார் கூட்டமைப்பு ஒப்பந்தத்தின்'' கீழ் நான்கு வழிச் சாலைகளுக்கான ஒப்பந்த புள்ளிகள் விரைவில் கோரப்பட உள்ளது.

தமிழக அரசு, திட்ட சாலை பாதுகாப்பு கூறுகளுக்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து அதனை போக்குவரத்து துறையுடன் ஒருங்கிணைத்து முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை மூலம் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேம்பட்டதிறன் செயல்பாட்டை எட்டுவதற்காக நிறுவன மறுசீரமைப்பு, மற்றும் மாநில சாலை மேம்பாட்டிற்கான கொள்கை சீர்திருத்தங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிறுவனக் கொள்திறன் மேம்பாட்டின் (ICE) கூறுகளுக்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் வெளிப்படையான நிலம் எடுப்பு, மறுவாழ்வு, மீள்குடியேற்ற (RFCTLARR) சட்டம் 2013 இன் படியும், உலக வங்கியின் நிலம் எடுப்பு மற்றும் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான செயல் திட்ட விதிமுறைகளின் வழிக்காட்டுதலின் பேரிலும் ''மீள்குடியேற்ற கொள்கை கட்டமைப்புக்கு'' அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

# II. சிறு துறைமுகங்கள் அலகு

## 3. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு, சுமார் 1076 கிலோமீட்டர் நீள கடற்கரையைக் கொண்டுள்ளது. இந்த கடற்கரையில், 1963ஆம் வருட பெருந்துறைமுகக் கழகச் சட்டத்தின்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ள எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று பெருந்துறைமுகங்களும், 1908ஆம் வருட இந்திய துறைமுக சட்டத்தின்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ள 23 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன. பெருந்துறைமுகங்கள் மைய அரசின் கட்டுப்பாட்டிலும், சிறு துறைமுகங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் தற்போதுள்ள ஏழு அரசுத் துறைமுகங்களில் ஒன்றான கடலூரில் திருவாளர்கள் கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட் நிறுவனத்தினர், கடல்சார் கட்டுமானங்களை நிறுவி, கடலூர் சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள ப்ளாஸ்டிக் (பிவிசி) தொழிற்சாலைக்குத் தேவையான வினைல் குளோரைடு மோனோமர் எனும் மூலப் பொருளை இறக்குமதி செய்து வருகின்றனர். இதேபோன்று, நாகப்பட்டினம் துறைமுகத்தில் திருவாளர்கள் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் தங்களது நரிமணம் சுத்திகரிப்பு ஆலையின் டீசல் மற்றும் நாப்தாவினை கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்து வருகின்றனர். மேலும், மரக்கட்டைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியன கடலூர் மற்றும் நாகப்பட்டினம் துறைமுகத்தில் அவ்வப்போது இறக்குமதியும் செய்யப்படுகிறது. பாம்பன் கால்வாயில் சிறு கலன்கள் இக்கால்வாயை கடப்பதற்கு வழிகாட்டப்படுகின்றன. கன்னியாகுமரி மற்றும் இராமேசுவரத்தில் சுற்றுலாப்பயணிகளுக்காக படகுப்போக்குவரத்து நடைபெறுகிறது.

தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் தொழில் முனைவோரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இயக்கப்படுகின்றன. இத்தனியார் முதலீட்டு துறைமுகங்களில் அனைத்து அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொறுப்பு தொழில் முனைவோரினைச் சார்ந்ததாகும்.

பதினாறு தனியார் முதலீட்டுத் துறைமுகங்களில், காட்டுப்பள்ளி துறைமுகம் (திருவள்ளூர்), எண்ணூர் சிறுதுறைமுகம் (திருவள்ளூர்), பி.ஒய்–03 எண்ணெய் வளப்பகுதி (கடலூர்), திருக்கடையூர் (நாகப்பட்டினம்) மற்றும் கூடங்குளம்

(திருநெல்வேலி) ஆகிய ஐந்து துறைமுகங்களில் துறைமுகம் சார்ந்த கட்டுமான இயந்திரங்கள் அல்லது துறைமுகம் சார்ந்த சரக்குகள் ஏற்றுமதி / இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து துறைமுகங்களில், எண்ணூர் மற்றும் திருக்கடையூர் சிறு துறைமுகங்களில் திரவ அமோனியா மற்றும் நாப்தா ஆகியவை பன்முனை நங்கூர மிதவை மற்றும் அமிழ்குழாய் அமைப்புகள் மூலம் கப்பலில் இருந்து குழாய் மூலமாக சேமிப்புக் கலன்களுக்கு நேரடியாக கொண்டு செல்லப்படுகிறது. காட்டுப்பள்ளி துறைமுகம் மூலமாக புதிய கப்பல்கள் கட்டுதல், பழுதுபார்த்தல் பணிகளோடு, சரக்குப் பெட்டகங்கள், பொதுச்சரக்குகள், ஆகியன கையாளப்பட்டு வருகிறது. தற்சமயம் பி.ஒய்.03 எண்ணெய் வளப் பகுதி, திருச்சோபுரம் மற்றும் கூடன்குளம் ஆகிய துறைமுகங்களில் செயல்பாடுகள் ஏதும் நடைபெறவில்லை. கூடங்குளம் அணுமின்நிலைய விரிவாக்கப் பணிகளுக்காக கூடங்குளம் துறைமுகத்திற்கான அறிவிக்கையை இரத்து செய்யுமாறு திருவாளர்கள் நியூக்ளியர் பவர் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிட் நிறுவனத்தினர் கோரியுள்ளனர். மீதமுள்ள பதினொன்று துறைமுகங்கள், தேவையான சட்ட அனுமதி பெறுதல் மற்றும் துறைமுகம் சார்ந்த கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை இறுதி செய்தல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 3.1. சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விபரம்:

### 3.1.1. அரசுத் துறைமுகங்கள்

**அட்டவணை 11: அரசுத் துறைமுகங்கள் விவரம்**

| வ.எண். | துறைமுகம் | ஏற்றப்பட்ட சரக்குகள் | இறக்கப்பட்ட சரக்குகள் |
|---|---|---|---|
| 1. | கடலூர் | —— | வினைல் குளோரைடு மோனோமர், மரக்கட்டைகள் |
| 2. | நாகப்பட்டினம் | டீசல் மற்றும் நாப்தா | சமையல் எண்ணெய் மற்றும் பல்வகை சரக்குகள். |

### 3.1.2. தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்

**அட்டவணை 12: தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்**

| வ. எண். | துறைமுகம் | ஏற்றப்பட்ட சரக்குகள் | இறக்கப்பட்ட சரக்குகள் |
|---|---|---|---|
| 1. | காட்டுப்பள்ளி துறைமுகம் | சரக்குப் பெட்டகங்கள் | இத்துறைமுகத்தில் கப்பல்கட்டுதல் மற்றும் கப்பல் பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெறுகின்றன, பொதுச்சரக்குகள் |
| 2. | எண்ணூர் சிறுதுறைமுகம் | -- | திரவ அமோனியா |
| 3. | திருக்கடையூர் | -- | நாப்தா மறறும் இயற்கை எரிவாயு |

## 3.2. துறைமுக மேம்பாடுகள்

### 3.2.1. அரசுத் துறைமுகங்கள்

#### *3.2.1.1. கடலூர் துறைமுகம்*

திருவாளர்கள் கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிட் நிறுவனத்தினர், கடலூர் சிப்காட் வளாகத்தில் அமைத்துள்ள ப்ளாஸ்டிக் (பிவிசி) தொழிற்சாலைக்குத் தேவையான வினைல் குளோரைடு மோனோமர் எனும் மூலப் பொருளை இறக்குமதி செய்வதற்காக கடலூர் துறைமுக எல்லைக்குள் தீவுத் தோணித்துறை மூலமாக கையாண்டு வருகின்றனர்.

இத்துறைமுகத்தில் 2014–15ஆம் ஆண்டில் கையாளப்பட்ட சரக்குகளின் விவரம் பின்வருமாறு

**அட்டவணை 13: இறக்குமதி**

| வ. எண். | துறைமுகம் | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்கின் அளவு (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|---|
| 1 | வினைல் குளோரைடு மோனோமர் | 31 | 2,34,028 |
| 2 | இயந்திரங்கள் | | 5 |
| 3 | பல்வகை | | 529 |
| | **மொத்தம் (அ)** | **31** | **2,34,562** |

### அட்டவணை 14: ஏற்றுமதி

| வ. எண். | துறைமுகம் | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்கின் அளவு (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|---|
| 1 | பெட்ரோலியப் பொருட்கள் | – | 165 |
| 2 | இயந்திரங்கள் | – | 1 |
| 3 | பல்வகை | – | 677 |
| | **மொத்தம் (ஆ)** | **–** | **843** |
| | **பெரு மொத்தம் (அ + ஆ)** | **31** | **2,35,405** |

### 3.2.1.2. நாகப்பட்டினம் – சி.பி.சி.எல். துறைமுகம்

இத்துறைமுகத்தில் 2014–15ஆம் ஆண்டில் கையாளப்பட்ட சரக்குகளின் விவரம் பின்வருமாறு

### அட்டவணை 15: இறக்குமதி

| வ.எண். | துறைமுகம் | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்கின் அளவு ( மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|---|
| 1 | கச்சா எண்ணெய் | – | 1,917 |
| 2 | பல்வகை | | 2 |
| | **மொத்தம் (அ)** | | **1,919** |

### அட்டவணை 16: ஏற்றுமதி

| வ.எண். | துறைமுகம் | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்கின் அளவு (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|---|
| 1 | நாப்தா | 12 | 1,27,380 |
| 2 | டீசல் | 8 | 86,399 |
| 3 | சிமெண்ட் | 5 | 1,220 |
| 4 | பல்வகை | – | 1,394 |
| 5 | பெட்ரோலியப் பொருட்கள் | – | 88 |
| 6 | மண்ணெண்ணெய் | | 3,960 |
| | **மொத்தம் (ஆ)** | **25** | **2,20,441** |
| | **பெரு மொத்தம் (அ + ஆ)** | **25** | **2,22,360** |

### *3.2.1.3. பாம்பன் துறைமுகம்*

இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் தீவில் உள்ள பாம்பன் துறைமுகத்தில், மன்னார் வளைகுடாப் பகுதியில் பாம்பன் கால்வாயைக் கடந்து செல்லும் சிறு கலங்களுக்கு வழி காட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2014–15 ஆம் ஆண்டில், 191 கலங்கள் இக்கால்வாயைக் கடந்து சென்றுள்ளன.

### *3.2.1.4. இராமேசுவரம் துறைமுகம்*

இத்துறைமுகம், இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் தீவில் அமைந்துள்ளது. இங்கு அக்னிதீர்த்தக்கரையில் குறுகிய தூரத்திற்கு பயணிகள் படகுப்போக்குவரத்து நடைபெற்று வருகிறது. 2014–15 ஆம் ஆண்டில் 1,49,844 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

### *3.2.1.5. கன்னியாகுமரி துறைமுகம்*

கன்னியாகுமரியில் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், கரையிலிருந்து நடத்தப்பட்டு வரும் பயணிகள் படகு போக்குவரத்திற்காக இத்துறைமுகம் உள்ளது. இப்போக்குவரத்தினை, திருவாளர்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினர் நடத்தி வருகின்றனர். தமிழ்நாடு கடல்சார் வாரியம், இப்படகுப்பயணத்தை கண்காணிப்பதற்கான நிர்வாகச் செலவுக் கட்டணத்தை வருவாயாகப் பெறுகிறது. 2014–15 ஆம் ஆண்டில் 19,53,959 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

### *3.2.1.6. குளச்சல் துறைமுகம்*

குளச்சலில் எரிவாயு முனையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு அரசு கோரியதையடுத்து, திருவாளர்கள் ஐ மேரிடைம் கன்சல்டன்சி பி லி நிறுவனத்தினரிடம் அரசின் கருத்தினை ஆராயும்படியும், அதனடிப்படையில் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையினை திருத்தியமைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தினர் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளனர். இவ்வறிக்கையில், திருவாளர்கள் ஐ மெரிடைம் கன்சல்டன்சி பிரைவேட் லிட் நிறுவனத்தினர் அளித்த சாத்தியக் கூறு அறிக்கையில் எரிவாயு முனையம் அமைவதில் ஏற்படும் இடர்பாடுகளை குறைப்பதற்காக சர்வதேச நிறுவனங்களின் பங்கேற்பு அவசியம் எனத் தெரிவித்துள்ளனர். இவ்வாறான

பங்கேற்பிற்கு சர்வதேச நிறுவனங்களின் பட்டியலை அளிக்கும்படி ஆலோசக நிறுவனத்திடம் கோரப்பட்டது. மேலும், 12.12.2013 ஆம் நாளிட்ட ஆலோசக நிறுவனத்தின் கடிதத்தில், குளச்சல் துறைமுகத்தை எரிவாயு முனையம் அல்லது தொழில் மண்டலத்தை அடிப்படையாகக் கொண்ட துறைமுகம் அல்லது சுற்றுலா மற்றும் உல்லாச படகு சவாரி உள்ளிட்ட கடல்சார் நகரத்திற்கான அடிப்படை துறைமுகம் போன்ற பல்வேறு வழிமுறைகளில் மேம்படுத்திடலாம் என தெரிவித்துள்ளனர். இவ்வறிக்கையானது இந்த வழிமுறைகளின் மாதிரி மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் 03.07.2014 அன்று நடைபெற்ற வாரியக்கூட்டத்தில் வைக்கப்பட்டு குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்துவதன் முயற்சியாக ஒரு பரந்த கருத்துருக்கள் வரவேற்கும் அறிவிப்பு (Expression of Interest) வெளியிட உத்தேசித்து, அதற்கான அறிவிப்பு 24.09.2014 அன்று வெளியிடப்பட்டது.

இதன் பலனாக, திருவாளர்கள் WAPCOS லிட் நிறுவனத்தினர் என்ற ஒரே ஒரு நிறுவனம் மட்டும் கருத்துரு சமர்ப்பித்தது. இருப்பினும், திருவாளர்கள் WAPCOS லிட் நிறுவனத்தினர் குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்தும் திட்டம் எதையும் தங்களது அறிக்கையில் சமர்ப்பிக்கவில்லை. மேலும், இந்நிறுவனம் சமர்ப்பித்துள்ள ஆவணம், ஆலோசகப் பணி சார்ந்ததாகவும், மேம்பாட்டு வழிமுறைகள் குறித்த கருத்துரு ஏதுமில்லாமலும் உள்ளது.

### 3.2.2. தனியார் முதலீட்டு துறைமுகங்கள்

#### *3.2.2.1. காட்டுப்பள்ளி துறைமுகம்*

திருவாளர்கள் எல் & டி ஷிப்பில்டிங் லிமிடெட் நிறுவனத்தினரால் செயல்பாடுகள் துவக்கப்பட்டுள்ளன. தற்போது சரக்குப் பெட்டகங்கள் மற்றும் பொதுச் சரக்குகள் கையாளப்பட்டு வருகிறது. கப்பல் கட்டுதல் மற்றும் கப்பல் பழுதுபார்ப்புப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இத்துறைமுகத்தில் 2014–15ஆம் ஆண்டில் கையாளப்பட்ட சரக்குகளின் விவரம் பின்வருமாறு:

### அட்டவணை17: இறக்குமதி

| வ. எண். | துறைமுகம் | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்கின் அளவு ( மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|---|
| **1** | இரும்பு கட்டுமான அமைப்பு | 10 | 92,284 |
| **2** | மரக்கட்டைகள் | 1 | 8323 |
| | **மொத்தம் (அ)** | **11** | **1,00,607** |

### அட்டவணை18: ஏற்றுமதி

| வ. எண். | துறைமுகம் | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்கின் அளவு (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|---|
| **1** | இரும்பு கட்டுமான அமைப்பு | 1 | 9,874 |
| | **மொத்தம் (ஆ)** | **1** | **9,874** |
| | **பெரு மொத்தம்(அ + ஆ)** | **12** | **1,10,481** |

### அட்டவணை19: இறக்குமதி / ஏற்றுமதி விவரம்

| இறக்குமதி | | | | ஏற்றுமதி | | |
|---|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **சரக்குப் பெட்டகங்கள்** | | **எண்கள்** | **சரக்குப் பெட்டகங்கள்** | | **எண்கள்** |
| 1 | 20 அடி நிரப்பப் பட்டவை | **கப்பல்களின் எண்ணிக்கை** | 4,142 | 20 அடி நிரப்பப் பட்டவை | **கப்பல்களின் எண்ணிக்கை** | 2,528 |
| 2 | 40 அடி நிரப்பப் பட்டவை | | 5,474 | 40 அடி நிரப்பப் பட்டவை | | 5,236 |
| 3 | 20 அடி காலி | | 76 | 20 அடி காலி | | 5,146 |
| 4 | 40 அடி காலி | | 636 | 40 அடி காலி | | 5,133 |
| | **மொத்தம் (இ)** | | **10,328** | **மொத்தம் (ஈ)** | | **18,043** |
| | **பெரு மொத்தம் (இ +ஈ)** | | | | **82** | **28,371** |

**(அ + ஆ + இ +ஈ)** மொத்தம் 94 கப்பல்கள் வந்துள்ளன.

### *3.2.2.2. எண்ணூர் சிறு துறைமுகம்*

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள இத்துறைமுகத்தில், திருவாளர்கள் கோரமண்டல் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்தினரால் பன்முனை நங்கூர மிதவை மற்றும் அமிழ்குழாய் அமைப்புகள் ஆகிய கடல்சார் வசதிகள் அமைக்கப்பட்டு திரவ அமோனியா இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

2014–15ஆம் ஆண்டில் 10 கப்பல்கள் மூலம் 57,832 மெட்ரிக் டன்கள் திரவ அம்மோனியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

### 3.2.2.3. திருக்கடையூர் துறைமுகம்

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூருக்கு அருகிலுள்ள பிள்ளைப்பெருமாள் நல்லூரில், திருவாளர்கள் பி.பி.என். பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தினரால் நிறுவப்பட்டுள்ள 330 மெகாவாட் இயற்கை வாயு மற்றும் நாப்தா ஒருங்கிணைந்த மின் உற்பத்தி திட்டத்திற்கான எரிபொருள் கையாளப்படுவதற்காக, இத்துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டிலிருந்து இத்துறைமுகம் செயல்பட்டு வருகிறது.

2014–15 ஆம் ஆண்டில், இத்துறைமுகத்தில் கீழ்க்கண்டவாறு சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

**அட்டவணை 20: இறக்குமதி**

| வ. எண். | சரக்கின் பெயர் | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்கின் அளவு ( மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|---|
| 1 | நாப்தா | 18 | 1,96,795 |
| 2 | எரிவாயு | – | 716 |
| 3 | கச்சாஎண்ணெய் | – | 1,881 |
| | மொத்தம் | 18 | 1,99,392 |

**அட்டவணை 21: இறக்குமதி**

| வ.எண். | சரக்கின் பெயர் | சரக்கின் அளவு (MMBTU) |
|---|---|---|
| 1 | எரிவாயு | 1104839.517 |

### 3.2.3. சரக்குப் போக்குவரத்து

தமிழ்நாட்டிலுள்ள சிறுதுறைமுகங்களில், 2014–15ஆம் நிதியாண்டில் 178 கப்பல்கள் மூலம் 8,25,470 மெட்ரிக் டன் சரக்குகள் மற்றும் 28,371 சரக்குப் பெட்டகங்கள் கையாளப்பட்டுள்ளன.

### 3.2.4. இதர தனியார் முதலீட்டுத்துறைமுகங்கள்

கீழ்க்கண்ட துறைமுகங்கள் மேம்பாடு பல்வேறு நிலைகளில் உள்ளன.

1) முகையூர்
2) திருச்சோபுரம்
3) சிலம்பிமங்கலம் கப்பல்தளம்
4) பரங்கிப்பேட்டை
5) காவேரி
6) வானகிரி

7) திருக்குவளை
8) புன்னகாயல்
9) உடன்குடி
10) மனப்பாடு
11) செட்டிநாடு தரங்கம்பாடி

## 3.3. தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்.

தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இதுவரை 23 தொகுதி பயிற்சி வகுப்புகள் முடிவுற்றுள்ளன. 40 நபர்கள் கொண்ட 6 மாத கால பொது முறை மாலுமி பயிற்சி (General Purpose Rating) வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இப்பயிற்சி நிறுவனத்தில் இந்திய அரசு கப்பல் துறை 1995 விதிகளின்படி முறையே "தன்னிலை பாதுகாப்பு உக்தி" (Personal survival techniques), "கடலில் முதலுதவி செய்தல் (Elementary First aid)" பற்றிய பயிற்சி, "தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு (Personal safety and social responsibility)" பற்றிய பயிற்சி, "எண்ணெய்க்கப்பல் பரிட்சயம் (Oil Tanker familiarization)" சம்பந்தமான பயிற்சி மற்றும் "தீயணைப்பு அடிப்படை பாதுகாப்புப் பயிற்சி" (Fire prevention and Fire fighting) ஆகிய ஐந்து வகைப்பட்ட பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஜனவரி –2015 முதல் 24வது தொகுதி பயிற்சி வகுப்புகள் துவங்கியுள்ளன.

## 4. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் **11.04.1974**ஆம் நாளன்று கம்பெனிகள் சட்டம் **1956** இன்படி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான மொத்த நிலக்கரியை ஏற்றி வருவதற்காக நிறுவப்பட்டது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது **40,000** டன் கொள்ளளவுள்ள குறைந்த ஆழத்தில் செல்லதக்கதாக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்களை ஆகஸ்ட் **1985** முதல் ஜனவரி **1987** வரையிலான காலகட்டத்தில் சொந்தமாக பெற்று இவைகளை முழுமையாக தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிலக்கரி கொண்டு வர உபயோகப்படுத்துகிறது.

அதன் பிறகு கப்பல்கள் உலர் பழுதுபார்த்தலின் போது அதன் கொள்ளளவுகள் **45000** மெட்ரிக் டன்னாக அதிகரிக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு::

**அட்டவணை 22 : கப்பல்களின் கொள்ளவு விவரம்**

| கப்பல்களின் பெயர் | மாதம் மற்றும் வருடம் | மொத்த கொள்ளளவு (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| எம்.வி.தமிழ் காமராஜ் | நவம்பர் 2004 | 45000 |
| எம்.வி. தமிழ் பெரியார் | மே 2005 | 45000 |
| எம்.வி. தமிழ் அண்ணா | நவம்பர் 2005 | 45000 |

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மூன்று சொந்த கப்பல்கள் தவிர தனியார் கப்பல் நிறுவனங்களிடமிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலமாக எடுத்து வருகிறது.

## 4.1. நிலக்கரி எடுத்து வருதல்

### 4.1.1. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிலக்கரி எடுத்து வருதல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான நிலக்கரியை ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டிணம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றி காமராஜர் துறைமுகம், எண்ணூர் மற்றும் வ.உ.சிதம்பரனார் துறைமுகம், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் இறக்கப்படுகிறது.

### 4.1.2. என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) நிலக்கரி எடுத்து வருதல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல்மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, அந்நிறுவனத்தின் வல்லூர், வட சென்னையில் அமைந்துள்ள 3x500 மெகாவாட் திறன்படைத்த அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான இந்திய நிலக்கரி முழுவதையும் பாரதீப் / கங்காவரம் ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூர், காமராஜர் துறைமுகத்திற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலமாக எடுத்துவரும் பணியினை மேற்கொண்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், நிலக்கரி ஒதுக்கீடு, தமிழ்க் கப்பல்கள் மற்றும் வாடகைக் கப்பல்கள் மூலம் நிலக்கரி ஏற்றி வந்த விவரங்கள் பின்வருமாறு :–

**அட்டவணை 23 : நிலக்கரி ஒதுக்கீடு விவரம்**

(இலட்சம் மெட்ரிக் டன்)

| வருடம் | நிலக்கரியின் ஒதுக்கீடு | நிலக்கரி ஏற்றும் துறைமுகங்களில் வந்து சேர்ந்த நிலக்கரியின் அளவு | வாடகைக் கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு | சொந்தக் கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு | மொத்தமாக எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் மொத்த அளவு | சாதனையின் அளவு % |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 2013–14 | 202.72 | 147.24 | 123.28 | 26.37 | 149.65 | 101.63 |
| 2014–15 | 230.44 | 162.68 | 127.96 | 33.58 | 161.54 | 99.30 |

## 4.2. நிதிநிலை மற்றும் செயல் திறன்

### 4.2.1. செயல் திறன்

சொந்த கப்பல்கள் மற்றும் வாடகைக் கப்பல்களின் 2013–2014 மற்றும் 2014–2015ஆம் ஆண்டைய செயல்திறன்.

**அட்டவணை 24 : கப்பல்களின் செயல்திறன்**

| | 2013–14 | 2014–15 |
|---|---|---|
| **சொந்தக் கப்பல்கள்** | | |
| கப்பல்களின் எண்ணிக்கை | 3 | 3 |
| பயண எண்ணிக்கை | 59 | 75 |
| எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு ( இலட்சம் மெட்ரிக் டன் ) | 26.37 | 33.58 |
| பயணம் ஒன்றுக்கு எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் சராசரி அளவு (மெட்ரிக் டன்) | 44695 | 44769 |
| **வாடகைக் கப்பல்கள்** | | |
| வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை | 10 | 10 |
| பயண எண்ணிக்கை | 229 | 231 |
| எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு (இலட்சம் மெட்ரிக் டன்) | 123.28 | 127.96 |
| பயணம் ஒன்றுக்கு எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் சராசரி அளவு (மெட்ரிக் டன்) | 53834 | 55396 |
| எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் மொத்த அளவு ( இலட்சம் மெட்ரிக் டன்) | 149.65 | 161.54 |

### 4.2.2. நிதி நிலை

கடந்த மூன்று ஆண்டுகளில் கழகத்தின் மொத்த நிதி நிலை செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு :–

**அட்டவணை 25 : நிதி நிலை விவரம்**

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | மொத்த வருவாய் | நிகர இலாபம் |
|---|---|---|
| 2012–2013 | 544.90 | 5.17 |
| 2013–2014 | 667.21 | 6.85 |
| 2014–2015 | 625.13 | 7.72 |

## 4.3. கன்னியாகுமரி படகுத்துறை

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் ஆகியவற்றிற்குத் தேவையான நிலக்கரியை எடுத்து வரும் சீரியச்செயலோடு, குமரி முனையிலிருந்து அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு படகுப் போக்குவரத்தினையும் நடத்தி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான படகுத் துறையின் நிதிநிலை மற்றும் செயல்திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 26 : நிதி நிலை மற்றும் செயல்திறன் விவரம்**

| | 2013–2014 | 2014–2015 |
|---|---|---|
| இயக்கப்படும் படகுகளின் எண்ணிக்கை | 3 | 3 |
| பயணித்த பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 18.70 | 19.46 |
| கட்டண வசூல் (ரூபாய் இலட்சத்தில்) | 719.19 | 716.27 |
| இயக்க லாபம் (ரூபாய் இலட்சத்தில்) | 237.72 | 179.98 |

**எடப்பாடி கே. பழனிசாமி**
நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை
அமைச்சர்